43

# ஜகன் மோகினி

மன்மத ௵ பங்குனி ௴ 1—4—56 அணா நான்கு

## கீதாம்ருதம்

ஸ்ரீ ராஜாஜி அளிக்கும் அரிய விருந்து

மலர் 33 இதழ் 4



43/3-56
1788
OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
-JUL 19..
SL
[handwritten library label] 33·4
18320

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்



# ஜகன்மோகினி



ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.

—வீரராகவ கவி

ஏப்ரல் 1956. மலர் 33, இதழ் 4 மன்மத ஞு பங்குனி

## க்ஷேமலாபங்கள்

வாசகப் பெரியோர்களுக்கு நமஸ்காரம். உபயகுசலம்.

ராமாயணத்தில் ஹனுமார் சஞ்சீவியைக் கொடுத்து உதவியதுபோல எங்கள் குடும்பத்திற்கு ஏற்பட்ட மகத்தான அதிர்ச்சியில் தவிக்கும் எங்களுக்குச் சாந்தி அளிக்கும் முறையிலும், வாசக அன்பர்களுக்கு அரிய விருந்தாகும் முறையிலும் **ஸ்ரீராஜாஜி** கீதை அமுதத்தை கடைந்து இவ்விதழிலிருந்து எடுத்துக் கொடுக்கிறார். அத்தகைய **தாதா**வுக்கு எங்கள் குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் பாட்டியும், தாயாரும் அன்னஆகாரமின்றி அலைந்தருகும் நிலையில் **ராஜாராம் நாயுடுவும், பிரதிபிம்பமும்** உருவாக முடியவில்லை. கூடிய சீக்கிரத்திலேயே அவைகள் வெளிவரவேண்டிய சக்தியை பகவான் அருளவேண்டி பிரார்த்திக்கிறேன். அதுவரையில் அன்பர்கள் பொறுத்து மன்னிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

**புண்ணிய க்ஷேத்திர யாத்திரைக்கு** இவ்விதழிலிருந்து ஒரு அன்பர் நம்மை அழைத்துச் செல்கிறார். ஏற்கெனவே க்ஷேத்ராடனம் செய்தவர்களுக்கு அதை நினைவூட்டி உத்ஸாகமூட்டுகிறது. செய்யாதவர்களுக்குப் போகும்படி தூண்டுகிறது. அத்தகைய அருமையான விஷயத்தை அளிக்கும் பெரியாருக்கு வந்தனங்கள்.

மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத சுகாதார முறைபற்றிய ரசமான கட்டுரைகளை ஸ்ரீமதி டாக்டர். V. C. **அங்குளி** M. D. அவர்கள் அடுத்த இதழிலிருந்து நமக்கு அளிப்பார் என்பதை சந்தோஷத்துடன் தெரிவிக்கிறேன்.

இடமும் அவகாசமும் இன்மையால் காளிதாசர் கனவு, ராஜமய்யர், ஒரு பக்கக் கதை, விகடவெடி போன்றவை வெளியிட முடியவில்லை அடுத்த இதழிலிருந்து தொடர்ச்சியாக வெளிவரும்.

— **வை. மு. விஜயலக்ஷ்மி.**


''ஹாஸ்யக் களஞ்சியம்'' ''அனுபவச்சித்திரங்கள்''

## ''லக்ஷ்மி கல்யாணம் வைபோகமே''

### ஒரு சந்தோஷச் செய்தி

சென்ற வருஷம் ஜூலை மாதம் சென்னை ரேடியோ நிலையத்தில் ஸ்ரீமதி. வை. மு கோ. அவர்களால் இசைச் சித்திரமாக நடைபெற்ற **'தென்னாட்டுக் கல்யாண முறைகள்'** ரேடியோவில் ஆயிரக்கணக்கான மக்கள் கேட்டு இன்புற்றதைவிட அதிகமான பாட்டுக்களும் வசனங்களும் சேர்த்து புத்தக ரூபமாக **சகோதரி R. S. சுப்பலக்ஷ்மி** அவர்களின் அருமையான முகவுரையுடன் வெளி வந்துள்ளது.

**விலை அணா 12.**

**நீங்கள் ரேடியோவில் கேட்டு மகிழ்ந்த**

**சந்திரகலாமாலை விலை அணா 12.**



விண்ணுடு ஏகிய வை. மு. ஸ்ரீ.

மலர் 33. இதழ் 4. ஏப்ரல்'56

## பொருளடக்கம்.

| | பக்கம் |
|---|---|
| புது நாட்டுப் பெண்களின் தனிக் குடித்தன ஏற்பாடுகள் V. K. பார்த்தஸாரதிஐயங்கார் | 1 |
| பகவத் கீதைக் குறிபபுகள் —ராஜாஜி | 5 |
| புண்ணிய க்ஷேத்திர யாத்திரை —T. S. ராஜகோபாலன் | 9 |
| ஒரு பக்தனின் ஸந்தேக நிவர்த்தி —வை. மு. ஸ்ரீ. | 13 |
| தெரிந்த தலைவி —குமாரி டி. கமலா | 17 |
| அறிவுப் போட்டி | 24 |
| அவரவர் பாக்கியம் —T. C. K. மல்லிகை சுந்திரம் | 25 |
| அறிஞர்களின் அமுதவாக்கு —அஸ்வின் | 32 |
| வாழ்க்கையில் ஒரு குறிப்பு —உண்மை விளம்பி | 33 |
| கிருஹலக்ஷ்மி —ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் | 35 |
| மேனாட்டுத் தத்துவம் —ரா. ஸ்ரீ. தேசிகன் | 38 |
| அநுதாபச் செய்திகள் | 41 |
| சங்கத்தின் சகோதரர் —H. R. ரங்கநாயகி அம்மாள் | 49 |
| என்னருமைத் தந்தை குமாரி வை. மு. விஜயலக்ஷ்மி | 50 |
| ஆடும் குதிரை குமாரி வை. மு. விஜயலக்ஷ்மி | 53 |

ஸ்ரீமான். வி. கே. பார்த்தஸாரதி அய்யங்கார்

# புது நாட்டுப் பெண்களின் தனிக் குடித்தன ஏற்பாடுகள்

"எல்லாப் பொருளும் இதன்பால் உள : இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்"—

திருக்குறளைப் பற்றிச் சங்கப்புலவர்கள் இப்படிச் சொன்னது மெய்யோ, பொய்யோ. ராஜ்யப் புனரமைப்பு மசோதாவைப் பற்றி இப்பொழுது இப்படிச் சொல்வது அவசியமாகிவிட்டது. இந்திய பார்லிமெண்ட் பிதா, நமது பாரதமாதாவுக்குப் பதினைந்து நாட்டுப் பெண்களும், சப்த கன்னிகைகளுமாகப் பிறப்பித்துக் கொடுத்து, ரா. பு. அ. மசோதா வாகனத்திலேற்றி, அந்தந்த மாகாணங்களுக்கு அனுப்பியும் விட்டார். மாகாண சட்டசபைகளிலுள்ள பொதுமக்களது தேர்ந்த பிரதிநிதிகள், தமது சட்டசபைகளில்

இதை விவாதித்து, தமது சிரிய பொரிசுகளை, 16—4—1956க்குள் மத்திய சர்க்காருக்கு அனுப்பிவைக்க வேண்டும். மத்திய சர்க்கார், அவற்றையெல்லாம் திரட்டி யுருட்டிப் பரிசீலனை செய்து, பார்லிமெண்டில் வைத்து, தமது முடிவான இஷ்டப்படிக்கு, ரா. பு. அ. சட்டம் கோர்த்துப் பிறப்பிப்பார்கள். இந்த முடிவு, வருகிற செப்டம்பர் முடிவிற்குள் முடிவடையவேண்டுமாம். அக்டோபர் முதல் தேதியன்று, புதுநாட்டுப் பெண்களது தனிக் குடித்தன வாழ்க்கை துவக்கப்பட வேண்டுமாம். இதுவரை, எத்தனையோ, வித நாட்டுப்பெண்கள் கீழ், எவ்வளவோ வித வாழ்க்கைத் திண்டாட்டங்களெல்லாம் அனுபவித்தாகி விட்டது. வாழ்க்கை என்றாலே, கரைகாண முடியாத துக்கக் கடல் என்பதுதானே தாத்பர்யம்!...

இந்த விஷயத்தில், ஆந்திரா, எப்பொழுதும் அதிர்ஷ்டமுள்ளதென்றே சொல்லவேண்டும். ஆதியில், ஆந்திர ராஜ்யம் அனுயாசமாகக் கிடைத்துவிட்டது ஆந்திரருக்கு. இப்பொழுது, புனரமைப்பு சோதனை காலத்திலும், 'விசாலாந்திரா' என்ற ஆந்திர—தெலுங்கானு' வரமும்—அனுயாசமாகவே ஆந்திரருக்கு உறுதி கொடுக்கப்பட்டு நிற்கிறது. 'நாட்டுப் பெண் வாய்ப்பதுவும் ஓர் அதிர்ஷ்டந்தான்!' 'ஐயோ! நாட்டுப்பெண் வாய்த்ததே! என் தலையிலெழுத்து'—என்பதுவும் அனுபவந்தான். அதிர்ஷ்டம் உண்டவல!

மசோதாவில் புனரமைப்புண்ட 15 நாட்டுப் பெண்களாவன:-

(1) ஆந்திர-தெலுங்கானு (2) அஸ்ஸாம் (3) பீஹார் (4) குஜராத் (5) கேரளம் (6) மத்திய பிரதேசம் (7) மதருஸ் (8) மகாராஷ்டிரம் (9) மைசூர் (10) ஒரிஸ்ஸா (11) பஞ்சாப் (12) ராஜஸ்தான் (13) உத்தரப் பிரதேசம் (14) மேற்கு வங்காளம் (15) ஜம்மு-காஷ்மீரம்.

ஏழு யூனியன் டெரிட்டரிகளான சப்த கன்னிகைகளாவன:-

(1) பம்பாய் (2) டில்லி (3) ஹிமாசலப் பிரதேசம் (4) மணிப்பூர் (5) திரிபுரம் (6) அண்டமான்-நிகோபார் தீவுகள் (7) லக்காடிவ்-மினிகாய்-அமினிடிவ் தீவுக்கூட்டம்.

பெப்ஸு, பஞ்சாபுடன் சேர்க்கப்பட்டுவிட்டது. ஹிமாசலப் பிரதேசம் மட்டும் கன்னிகையாகவே தனித்து நிற்கிறது. 'சேர்க்கவில்லை பார்த்தீர்களா', என்று சொல்லிச் சீக்கியரது நல்லுறவைச் சம்பாதிக்கவும்,—'கூடிய சீக்கிரத்திலேயே சேர்த்துவிடப் போகிறோம்',—என்ற உறுதி கூறி,: ஹிந்துக்களது நல்லுறவைச் சம்பாதிக்கவும் சர்க்கார் செய்துள்ள ராஜதந்திரமாகக் காண்கிறது இது. தவிர, மேற்கு வங்காள பீஹார் சேர்க்கை, மசோதாவில் இடம்பெறவில்லை. 'தானுகச் சேர விரும்புபவர்களைச் சட்டஞ் செய்து கட்டாயப் படுத்துவானேன்'—என்ற உன்னத மனப்பான்மை யோடும் இது.

அண்டமான், லக்காடிவ், என்ற இரு தீவுக் கூட்டங்கள் தவிர்த்த 15 மகாணங்களையும், 5 யூனியன் டெரிட்டரிகளையும், ஐந்து 'த்ஸோன்'களில் அமைத்துள்ளார்கள்.

18320

1. வடக்கு ஜோனில்: பஞ்சாப், ராஜஸ்தான், ஜம்மு-காஷ்மீரம், ஹிமாசலப் பிரதேசம்.

2. மத்திம ஜோனில்: உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம்.

3. கிழக்கு ஜோனில்: பீஹார், மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா அஸ்ஸாம், மணிப்பூர், திரிபுரம்.

4. மேற்கு ஜோனில்: மகாராஷ்டிரம், குஜராத், பம்பாய்.

5. தெற்கு ஜோனில்: ஆந்திர—தெலுங்கானா, மதருஸ், மைசூர், கேரளம்.

இந்த 5 ஜோன்களில், ஒவ்வொன்றிற்கும் ஒரு 'அட்வைஸரி கௌன்சில்' கொடுக்கப்பட்டுள்ளது. இதன் அங்கத்தினராவர்:-

(1) ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மத்தியசபை மந்திரிகளில் ஒருவர்

(2) மாகாணப் பிரதிநிதிகளாக: அந்தந்த மாகாணப் பிரதம மந்திரியும்; ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் அந்தந்த கவர்னரால் நியமிக்கப்பட்ட 2 மந்திரிகளும்.

(3) யூனியன் டெரிட்டரி பிரதிநிதிகளாக: ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தினர்.

(4) கிழக்குத் ஜோனில், அஸ்ஸாம் கவர்மெண்டுக்கு நியமனம் பெற்றுள்ள உதவியாளர் (அட்வைஸர்).

இவர்கள் தவிர, மற்றும்

(5) ப்ளானிங் கமிஷனால் நியமிக்கப்பட்ட ஒருவர்.

(6) டெவலப்மெண்டு கமிஷனால் நியமிக்கப்பட்ட ஒருவர்.

(7) அந்தந்த மாகாணங்களின் பிரதமகாரியதரிசிகள். (Chief Secretaries.)

இந்த அங்கத்தினர்களைக்கொண்ட ஒவ்வொரு ஜோனல் கௌன்ஸிலுக்கும், அதிலுள்ள மத்தியசர்க்கார் மந்திரியே தலைவராவர். மாகாணப் பிரதிநிதிகளாம் பிரதமமந்திரி யொருவர் உபதலைவராயிருப்பர். இந்த உபதலைவர் பதவி, வருஷாவாரியாக, ஒவ்வொரு மாகாணப் பிரதமருக்காக, முறைப்பாடிட்டு மாறிவருவதாகும்.

இந்த ஜோனல் கௌன்ஸில்கள், மாகாண நிர்வாக விஷயங்களில் நேரிடையாகச் சம்பந்தப்படாது, வெளிநின்று மேற்பார்வையிட்டுச் சிபாரிசுகள் சொல்லும் மாமியார் கௌன்ஸில்களேயாம்.

மாகாணங்களின் உள்நாட்டு விவகாரங்களைக் கவனித்து அதிகாரம் நடத்திட, நாத்திமார் கமிட்டிகள் வேறு கொடுபட்டுள்ளது. இதற்கு, ரீஜனல் கமிட்டிகள் என்று பெயர், அந்தந்த மாகாணங்களினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்டதாகும் இந்தக் கமிட்டி. மாகாணப் பிரதம மந்திரிக்குத் தனது மாகாணக் கமிட்டியில் இடமில்லையென்பதை நன்கு கவனித்தல் அவசியம். அவர் தவிர்த்த இதர மந்திரிகள் யாவரும் இதனுள் இடம்பெற்றுள்ளவராவர்.

(தொடர்ச்சி: 8-ம் பக்கம்)

# கீதாம்ருதம்



அன்று இராஜகோபாலன் கீதாசார்யனுக அர்ஜுனன்மூலமாக உபதேசித்ததை இன்று ஸ்ரீ ராஜாஜி அனுபவபூர்வமாக நமக்கு அளிக்கிருர்.

## பகவத்கீதைக் குறிப்புகள்

### ஸ்ரீ ராஜாஜி

பத்திராதிபர் ஸ்ரீமதி கோதைநாயகி அம்மைக்கு ஏற்பட்ட மகத்தான துயரத்தைத் தாங்கும் சக்தியை ஆண்டவன் அவருக்கு அருள்வாருக.

இந்த சமயத்தில், பத்திரிகைக்கு விஷய தானம் அவர் கேட்டதை நான் எப்படி மறுக்கமுடியும்? ஆதலால், இந்த பழைய சமாசாரத்தை எழுதிவருகிறேன். அதிகம் தெரிந்துவிட்டவருக எழுதவில்லை. பெரியோர்கள் மன்னிக்க வேண்டும்.

படித்துவரும்போது அவ்வப்போது எனக்குத் தோன்றியதை எழுதி வைததது அதைத் தொடர்ச்சியாக "ஜகன்மோகினி"யில் பிரசுரிக்க அனுப்புகிறேன். சிலருக்காவது பயன்படலாம்.—இரா.

### முதல் அத்தியாயம்

**சுலோகம் : 1**

'நம்முடையவர்கள் என்றும்', 'பாண்டவர்கள் என்றும்' பேத உணர்ச்சியுடன் கேட்கும் கேள்வி திருதராஷ்டிரனுடைய பட்சபாத மனப் பான்மையைக் காட்டுகிறது

**சுலோகம் : 3**

'உம்முடைய சிஷ்யன்', 'திருபத புத்திரன்' என்கிற வார்த்தை துரியோதனனுடைய அதிருப்தி மனேநிலையைக் குறிக்கிறது. ஆசாரியன்மேல் பூரண பக்தி வைக்கவில்லை.

**சுலோகம் : 10-26**

'நம்முடைய பலம் அளவு கடந்ததாகத்தான் இருக்கிறது. ஆனல் அவர்களுடைய பலமும் போதுமாகத்தான் காணப்படுகிறது' என்கிருன் துரியோதனன். ஆரம்பத்திலேயே துரியோதனனுக்கு பயமும் சந்தேகமும் ஏற்பட்டுவிட்டதை கவி காட்டுகிருர். எல்லாரும் சரியாக பீஷ்மரைக்

காப்பாற்றி வாருங்கள் என்கிறான். யுத்தத்துக்குச் சன்னத்தமாக நிற்கும் பெரிய சேனைகளைப் பார்த்து, துரியோதனனுக்கு இவ்வளவுதான் தோன்றிற்று. ஆனால் அர்ஜுனனுடைய குணம் வேறுவிதமானது என்பதைப் பின்னால் காண்கிறோம். மாதவனும் அர்ஜுனனும் பாஞ்சசன்னியம், தேவதத்தம் என்கிற சங்கங்களை முறையே ஊதுகிறார்கள். அர்ஜுனனுந்தான் அப்போது யுத்தத்துக்குத் தயாராக ஆரம்பிக்கிறான். ஆயினும் பிறகு எதிரே நிற்கும் ஆசாரிய பந்துக்கள் நண்பர்கள் யுத்தத்துக்கு ஆயத்தமாக நிற்பதைக் கண்ணால் கண்டதும் அர்ஜுனனுடைய மனதில் திடீர் என்று ஒரு கலக்கம் ஏற்படுகிறது.

நல்லவர்களுக்கு ஒரு தர்ம சங்கடம் உண்டாவது இப்படித்தான். முதலில் செய்யவேண்டியதைச் செய்துகொண்டு போகும்போது, சிக்கலின் முழுத்தோற்றம் தெரிவதில்லை. விஷயங்கள் நெருங்கி நேரில் நிற்கும்போது சங்கடம் ஏற்படுகிறது.

யுத்தத்திற்கு எல்லாரும் ஆயுதங்கள் எடுத்து ஒருவரையொருவர் கொல்லுவதற்குத் தயாராக நிற்பதைக் கண்டு துரியோதனனுக்கு பயமும் சந்தேகமும் உண்டாயிற்று. சேனாபதியை ஜாக்கிரதையாகக் காப்பாற்றுங்கள் என்கிறான். அர்ஜுனனுக்கோ தாங்கமுடியாத துக்கம் உண்டாகிறது. நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும் இதுவே வித்தியாசம்.

## இரண்டாவது அத்தியாயம்

**சுலோகம் : 11-13**

பார்த்தசாரதியின் உபதேசம் படிப்படியாகச் செல்லுகிறது.

'மரணமும் பிறப்பும் ஒரு பெரிய விஷயமாக எண்ணி மூளையைக் குழப்பிக் கொள்ளாதே! மரணமானது உயிர் வேறு ஒரு தேகத்தை அடையும் நிகழ்ச்சியே அல்லது வேறல்ல. உயிருக்குச் சாவு என்பது இல்லை' என்கிறான் குழப்பமடைந்த அர்ஜுனனுக்கு.

14, 15 சுலோகங்களை வேறு அத்தியாயத்துக்கு மாற்றி விடவேண்டும் என்று தோன்றுகிறது.

**சுலோகம் : 16-25**

முதலில் சொன்னதை மேலும் விளக்குகிறான்.

**சுலோகம் : 26-27**

மரணம் என்பது எந்த உயிருக்கும் நிச்சயம் விலக்க முடியாது. மாண்ட உயிருக்கு மறுஜன்மம் நிச்சயம். அதை

யும் விலக்கமுடியாது. விலக்க முடியாத ஒரு நிகழ்ச்சிக்குத் துயரப்படலாகாது.

**சுலோகம் : 28-29**

சிலகாலம் மனிதன் உயிர் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அந்த உயிர் முந்தி என்னவாக இருந்தது என்பது நமக்குத் தெரியாது. மரணத்துக்குப் பிந்தி அது என்னவாகிறது என்பதும் தெரியாது. இந்தப் பெரிய ரகசியத்தை யாரும் தீர்த்துக் கொண்டதில்லை. இதை நான் கண்டேன் என்று சொல்ல யாரும் முன்வரமாட்டார்கள். முன் வந்தாலும் உண்மையில் ரகசியத்தை விளக்க முடியாது.

**சுலோகம் : 30**

உண்மையில் உயிரைக் கொல்லமுடியாது. யாராலும் முடியாது. ஆனபடியால் அர்ஜுனனே துயரப்பட வேண்டாம்.

**சுலோகம் : 31-37**

OFFICE OF THE REGISTRAR ... JUL 1956

உன்னுடைய குலதர்மத்தை யோசித்துப் பார். நீ யுத்தத்தினின்று இப்படிப் பின் வாங்கலாமா? தர்ம யுத்தத்தைவிட க்ஷத்திரியன் வேறு என்ன ஆசைப்படுவதற்கு உண்டு. இந்த தர்ம யுத்தம் நீ வேண்டாமலே வந்து சுவர்க்க வாசலைத் திறந்து 'வா !' என்று அழைக்கிறது. உன்னுடைய பெயரும் புகழும் என்னவாகும், நீ இப்போது பின் வாங்கினுயானல்? உன்னைப் போன்ற புகழ் பெற்றவனுக்கு அபவாதத்தைவிட வேறு என்ன கேடு விளையக்கூடும்? குலதர்மத்தைப் புறக்கணித்த பாவம் உன்னைச் சேரும். அனைவரும் உன்னை இகழ்வார்கள்.. ஒருவனுக்கு இதைவிட என்ன துக்கம் நிகழக்கூடும்? யுத்தத்தைக் கண்டு பயந்து ஓடினுய் என்றல்லவோ உலகம் உன்னைப் பற்றி நினைக்கும். உன் விரோதிகள் உன்னை எவ்வளவு கேவலமாகப் பேசுவார்கள். இதுவரையில் நல்ல பெயர் பெற்று வந்தவனுகிய நீ இனிமேல் எல்லாராலும் இகழப்படுவாய். கோழை என்றும், யுத்த சமார்த்தியம் இல்லாதவன் என்றும் உன்னை நிந்தித்துப் பேசுவார்கள். இதைவிட ஒருவன் அடையும் கேடு என்ன உண்டு? வீரனே, ஜயித்தாயானல் உலகத்தை ஆள்வாய். இறந்தாயானல் சுவர்க்கமடைவாய். எழுந்து நில். இந்தத் தகாத மனக்குழப்பத்தை அகற்றி, யுத்தம் செய்யத் தீர்மானித்து எழுந்து நில்!

இப்படி ஆரம்பித்தான் கீதாசார்யன். இதுவரையில் பாரதக் கதை. இங்கிருந்து கீதை உபதேசம் ஆரம்பம்.

(தொடரும்)

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

மாகாணப் பொதுத் தேர்தல்கள் 1957-ல் நடைபெறும், அதுவரை, தாற்காலீக சட்டசபைகள் அமைவதாகும்.—ஒவ்வோர் மாகாணத்திற்குமான உயர்தர அரசியல் உத்யோகப்பதவியாளர் தொகையில், (Superior Administrative Services) பாதிக்கணக்கு, அந்தந்த மாகாணமல்லாத வேற்று மாகாணங்களிலிருந்தும் எடுக்கப்படுவதாகும்.

இந்தப் புது நாட்டுப் பெண்களை வரவேற்பதற்குப் பூர்வாங்கமாக, இந்தியன் கான்ஸ்டிட்யூஷன் ஆக்ட்டில் பலதிருத்தங்கள் ஏற்பட்டாகவேண்டியுள்ளது. முக்யமாக, பதினைந்து திருத்தங்களாவது ஏற்படக்கூடுமாம். இதன் காரணமாக, நமது புராதன ராஜப்பிரமுகர்களது ஜீவித சரிதம் முடிவடைவதாகும்—. ஏ. பி. ஸி. என்ற மாகாணத் தராதரப் பிரிவினைவகையும் மறைவதாகும்,

ஊன்றிப் பார்க்கில், இந்த மாமி நாத்திகளுக்கிடையே அகப்பட்டுள்ள புது நாட்டுப் பெண்களது தனிக்குடித்தன வாழ்க்கை, மிக்க சிக்கலுற்றதாகவே தோற்றுகிறது. த்ஸோனல் கௌன்ஸில்களுக்குத் தலைவராக வரும் மத்திம சர்க்கார் மந்திரியை, எந்த ஆதாரங்கொண்டு ஜனாதிபதி தேர்ந்தெடுப்பது, என்பது, முதல் பிரச்னை. பல மாகாணங்கள் கொண்ட கௌன்ஸிலில், ஒரு மாகாணப் பிரதம மந்திரி, ஒரு வருஷ விகிதம் உபதலைவப் பதவி கொண்டுபோனால், மாகாண விஷயாதிகளில் இவருக்கு என்ன அபிமானமும் அனுபவமும் மிகக் கூடுமென்பது இரண்டாவது பிரச்னை: இவருக்குத் தனது மாகாணக்கமிட்டியில் இடமில்லை. கமிட்டியிலுள்ள இதரமந்திரிகளுக்கும், கௌன்ஸிலிலுள்ள பிரதம மந்திரிக்கும் முரண்பாடுகள் ஏற்பட்டால், மாகாணத்தின் கதி என்னவாவது?

பொதுக் குடும்பம் விட்டுத் தனிக் குடித்தனம் ஓடும் புது நாட்டுப்பெண்களுக்கு, புதுக்குடித்தன அவதிகள், போகப் போகத்தானே தெரியவருவதாகும்! நாம் சொல்லியா அவர்கள் கேட்கப்போகிறார்கள்!—இந்த அமர்க்களத்திற்கிடையே, நமது ராஜாஜி ஒரு பக்கம்,—'ஐயோ! ஆங்கிலரது, பிரித்து ஆள்வது, என்ற மித்ரபேத உபாயத்தையே நமது சுயராஜ்ய அரசாங்கமும் ஆதரித்து அனுஷ்டித்திட சிபாரிசுகள் நடந்தேறுகிறதே!' என்று, கண்ணீர்வடிக்கிறார், பாவம்—. யார் எதைச் சொன்னாலென்ன! எப்படி அழுதாலென்ன!—ரா. பு. அ. மசோதா, சட்டமாகப் போகிறது. சர்வகக்ஷிகள் கூட்டு முன்னணி, தமிழகம் வேண்டுமென்று கர்ஜிக்கிறது—. பம்பாயில், ஸம்யுக்த மகாராஷ்டிரர் உறுமல் ஒரு பக்கம்—,

'ஆவாரை யாரே அழிப்பார்? அதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர்?—ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்?
மெய்யம் புவியதன் மேல்!"—

# புண்ணிய க்ஷேத்திர யாத்திரை

ஸ்ரீயான் டி. எஸ். ராஜகோபாலன், பீ. ஏ., எல். டி.,
இந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி

"மன்னும் இமயமலை" என்ற பாட்டில் பாரதியார், நம் பாரத நாட்டின் எழிலையும் வளத்தையும், "மாரத வீரர்" என்ற பாட்டில் நம் நாட்டினரது சீரிய குணங்களையும் விவரித்து மகிழ்ந்தார். ஆழ்வார்களும், நாயன்மார்களும், மதாசாரியர்களும் தோன்றி வாழ்ந்த தென்னாடு, பாரத் தாயின் திலகமாகும். இத்தகைய அடியார்கள் போற்றும் பரந்தாமன் அவதாரஞ் செய்து புனிதமாக்கிய பெருமையும், மாநில மனன்னர் பலர் சாம்ராஜ்யம் அமைத்து ஆண்டு வந்ததால் சரித்திரப் பெருமையும், வற்றா மாநதிகள் பாய்வதால் இயற்கை வளம் பெற்ற பெருமையுங் கொண்டது வட நாடு. எங்களிற் சிலர் இரண்டு வருஷங்களுக்கு முன் வட நாட்டில் இமய மலையின் அடிவாரத்திலுள்ள ரிஷீகேசம் வரையில் சென்று, வலமாகக் காசி, அயோத்தி, கயா, கல்கத்தா, பூரி முதலிய இடங்களுக்கு யாத்திரை செய்தோம். பதரிகாச்ரமம் போகவேண்டுமென்ற ஆசை எங்களுக்கு எழுந்தது. இதற்குக் காரணம், புண்ணியத் தலம் சென்று இறைவனை அடிபணியவேண்டும் என்பதுடன், இமயமலைப் பிரதேசத்தில் வெகு தூரம் உட்சென்று வானளாவும் மலைச் சிகரங்களையும் கங்கை நதியின் ஓட்டத்தையும், இயற்கை எழிலையுங் கண்களால் பருகவேண்டுமென்பதே. எங்களது விருப்பத்திற்கிணங்க எங்களது தலைமை யாசிரியர், எங்களை அழைத்துச் செல்ல வேண்டிய ஏற்பாடுகள் பலவற்றையும் நெடுங் காலம் முன்னதாகவே, யாத்திரை அநுபவம் பெற்றவர்களுடன் கலந்து செய்து வைத்தார்.

நாங்கள் செப்டம்பர் மாதம் 15-ஆந் தேதி புறப்பட்டோம். எங்களுள் 40 பேர் இப்பள்ளிக்கூடத்து ஆசிரியர்; மற்றவர்கள் எங்களது நண்பர், அல்லது நெருங்கிய உறவினர். எங்களுக்காகப் பிரத்தியேகமாக அளிக்கப்பட்ட ரயில்வண்டிப் பெட்டி, புதுமுறைமானது, எல்லா வசதிகளும் பெற்றது. அதன் நடுவில் சமையலறையும், சாமான்களுக்கான அறையும், பெண்டிர்களுக்கான ஓர் அறையும் இருந்தன; நீராடுவதற்கு இரண்டு அறைகளும் மற்ற வசதிகளும் அதில் இருந்தன. உட்காரும் பெஞ்சுகள்மீது மெத்தை அமைந்திருந்தது. எங்களை வழியனுப்புவதற்காகப் பெரியதொரு கூட்டம் ரயில்வே ஸ்டேஷன் மேடையில் கூடியிருந்தது. கூட்டத்திலுள்ளோர் ரயில் வண்டிப் பெட்டியிலுள்ள வசதிகளைப் பார்த்துக் களித்தனர்.

சரியாக 10-30 மணிக்கு எங்களது ரயில் வண்டி—கிராண்ட் டிரங்க் எக்ஸ்ப்ரெஸ்—புறப்பட்டது. வெளியில் கூடியுள்ள சிறுவர், பெற்றோர், உறவினர் எல்லோரும் யாத்திரை அநுகூல

மாக முடிய வேண்டுமென ஆசி கூறினர். அன்று எங்களது மனம் இயற்கைக் காட்சியில் தாழவில்லை. மறுநாள் நாங்கள் தூங்கி விழித்ததும் கண்கொள்ளாத காட்சி யொன்றினைக் கண்டோம். சுற்றுப் புறத்தில் உயர்ந்தோங்கிய மரங்கள் அடர்ந்த காடுகள்; இவற்றினிடையே சிர்பூர் பட்டினமும், காகித இயந்திர சாலைகளும் திகழ்ந்தன. ரயில்பாதையின் இருபுறங்களிலும் தேக்க மரங்களும், மலர்கள் அணிந்த கருவேல மரங்களும், சிறு மூங்கிற் புதர்களும், இடையிடையே வளைந்து விரையும் அருவிகளும் எங்களது மனதைக் கவர்ந்தன. தரையில் படர்ந்துள்ள புல்லும் இலை அகன்று பசுத்து எழில் மிக்கு விளங்கியது. 8 மணிக்குச் சண்டா என்ற ஊரருகே சென்றது எங்களது வண்டி. மேற்கில் பாழடைந்த கோட்டை ஒன்று தென்பட்டது. அவ்வூருக்கு வடக்கில் ஆறு ஒன்று ஓடுகிறது. அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் ஏழைகள்; அவர்களது ஜீவனம் வேளாண்மை. நாகபுரியில் ரயில் வண்டி சிறிது நேரம் நின்றது. அங்கு அந்த நகரத்தின் அமைப்பையும் சுற்றியுள்ள தோப்புக்களின் அழகையும் கண்டோம். பகல் ஒன்றரை மணிக்கு கடால் என்ற இடத்திற்கு வந்தோம். அது விந்திய மலைத் தொடரின் ஆரம்பம். அங்கிருந்து நாங்கள் கண்ட இயற்கைக் காட்சிகளின் அழகு எங்களது கண்ணை விட்டு என்றும் நீங்காது. எந்தத் திசையிலும் எவ்வளவு தூரம் பார்த்தாலும் காடடர்ந்த குன்றுகளும் பள்ளத்தாக்குகளும் ஆயிரம் ஆயிரமாகக் காணப்பட்டன. மாலைப் போதில் மங்கிய கதிரவனின் கிரணங்களில் அருகேயுள்ள மரங்கள் வெண்மை கலந்த பசுமையுடன் விளங்கின; தொலைவிலுள்ளவை பசுகு பசுகு என்றிருந்தன. தொடுவானில் தோன்றும் குன்றுகள் கொண்டல்போல் கறுத்துக் தோன்றின. பள்ளத்தாக்குகளில் வளைந்து வளைந்து செல்லும் சிற்றருவிகளும், நெல், வரகு, சோளம்—இவை பயிராகும் வயல்களும், இடையிடையே அமைந்துள்ள கிராமங்களில் வீடுகளின் கூரைகளில் வேய்ந்த சிவந்த ஓடுகளும்—ஒவ்வொன்றும் பல பல வகையான வர்ணங்கள் பெற்று யாவையும் சேர்ந்து இயற்கை யன்னை அணியும் கலம்பகம் எனத் திகழ்ந்தன. விந்திய மலைப் பிரதேசம் கடந்ததும், நாங்கள் கண்ட காட்சி இதற்கு முற்றிலும் மாறுனது. எங்கும் சுக்கான் பூமி; சிறு புதர்கள் தவிர வேறொன்றுங் காணமுடியவில்லை.

மறுநாட் காலை நாங்கள் டில்லி சேர்ந்தோம். செங்கோட்டைக்கு அருகில் ஒரு சத்திரத்தில் அன்று தங்கினோம். முதலில் நாங்கள் பீர்லா மந்திர் என்ற லக்ஷ்மி நாராயணன் ஆலயத்திற்குச் சென்றோம். இந்த ஆலயம் நவீன முறையில் கட்டப்பெற்றது. இரண்டாவது தளத்தில்தான் ஆலயம் அமைந்துள்ளது. சுவர்களில் எங்கும் வேதம், புராணங்கள், கீதை—இவைகளிலிருந்து சுலோகங்களும் சித்திர விளக்கங்களும் பொறிக்கப்பெற்றுள்ளன. மூர்த்திகள் அழகு வாய்ந்தவை. ஆலயத்தில் அடியார்கள் எப்போதும் பஜனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆலயத்தின் அருகில் யாத்ரிகர்களுக்கெனச் சத்திரம் ஒன்றுள்ளது.



லக்ஷ்மிநாராயணன் ஆலயம், டில்லி.

2 மணிக்குச் செங்கோட்டையைப் பார்க்கச் சென்றோம். இது சிவப்புக் கல்லாலேயே (red sandstone) சமைந்தது; முதலில் மொகலாய மன்னர்களது கோட்டையாக இருந்தது. உள்ளே இருக்கும் மண்டபங்கள், அறைகள்—முதலியவற்றின தூண்கள் சலவைக் கற்களாலானவை. வளைவுகள் விசித்திரமான வேலைப்பாடு உடையன. கொலு மண்டபத்தில் சுவர்களில் பலவகையான சித்திரங்களும், கொடிக் கருக்கு வேலைப்பாடுகளும் உள்ளன; மேல் தளம் முழுதும் தங்க ரேக்கு பாவப்பெற்றது. நீராடுவதற்காக அமைந்துள்ள ஓர் அறையில் முன்பு யமுனை நதியிலிருந்து தண்ணீர் பாய்ந்து வந்ததென்று சொல்லுகிறார்கள். இந்தச் செங்கோட்டையில் கண்காட்சிச் சாலை ஒன்றுண்டு. அதில் முன் காலத்தில் மன்னர்கள் அணிந்த கவசங்களும், உடைகளும், அவர்கள் உபயோகித்த போர்க் கருவிகளும், அரசிகள் அணிந்த ஆடையாபரணங்களும், ஆங்கிலேயச் சீமாட்டிகள் அணிந்து வந்த உடைகளும் வைக்கப் பெற்றுள்ளன. இந்தக்கோட்டை முழுதும் சுற்றிப் பார்க்கச் சுமார் 4 மணியாவது ஆகும்.

எங்களது வருகையைக் கேட்டறிந்த பழைய மாணவர் சிலர், எங்களை 6-30 மணிக்குக் கான்ஸ்டிடூஷன் க்ளப்பிற்கு வருமாறு கேட்டுக் கொண்டனர். அவர்களது விருப்பத்திற் கிணங்க நாங்கள் அங்கு ஒரு மணி நேரம் வரையில் தங்கி அவர்களுடன் அளவளாவினோம். எங்களைக் கண்டு அவர்கள் பெற்ற களிப்பிற்கு எல்லையில்லை. "பெரிதுவக்கும் சான்றோனெனக் கேட்ட தாய்" என்பதுபோல, எங்களிடம் படித்த பிள்ளைகள் நல்ல நிலையிலிருப்பதைக் கண்ட எங்களது உகப்பிற்கும் அளவேயில்லை. அன்புடன் வரவேற்ற அவர்களிடம்விடை பெற்றுக்கொண்டு, அன்றிரவு டூன் எக்ஸ்பிரஸ்ஸில் ஹரித்வாரத்திற்குப் பயணமானோம். வண்டி 8-30 மணிக்கு டில்லியை விட்டுக் கிளம்பியது. மறுநாள் காலை 5 மணிக்கு ஹரித்வார் சேர்ந்தது.

இது இமயமலையின் அடிவாரத்திலுள்ள ஒரு நகரம்; மாயா என்ற பெயர் வாய்ந்தது; பதரிகாச்ரமத்திலுள்ள பெருமான் ஹரி ஆதலால், அவனுடைய திருப்பதிக்கு வாசல் போன்ற இது ஹரித்வார் என்று வழங்கப்படுகின்றது. இந்த க்ஷேத்திரத்தின் மகிமை,

ஸர்வே தேவாஸ் ஸகந்தர்வா: யக்ஷ-கிந்நர-தாபஸா : |
திஷ்டந்தி யத்ர தீர்த்தே ஹிஸர்வே தேமுக்தி லாலஸா:||

(யாவரும் முக்தியை விரும்பினவர்களாய், கந்தர்வர்களுடன் தேவர்கள் யாவரும், யக்ஷரும், கின்னரரும், தபஸ்விகளும் எந்தத் தீர்த்தத்தில் நிற்கின்றனரோ...)

என்பதிலிருந்து அறியலாகும். இமயமலையின் எழில் வளத்தை முதன் முதலாக நாம் இங்குக் காண்கிறோம். ஸ்நானக் கட்டம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் ஒன்றரை மைல் தொலைவிலுள்ளது. மலையிலிருந்து நிலத்திற் பாய்வதால், கங்கையின் வேகத்தைப் பார்த்து முதலில் யாவரும் பயந்து விடுவார்கள். நீராடுமிடத்தில் கங்கையிலிருந்து ஒரு கால்வாய் வெட்டியிருக்கிறார்கள்; இதில் மார்பளவு ஆழந்தான் தண்ணீர் உள்ளது. மக்கள் தினந்தோறும் திரள் திரளாக நீராடிச் செல்லுகின்றனர். ஆடவர், பெண்டிர், குழந்தைகள், சிறுவர், சிறுமியர்—யாவரும் காங்காதேவியின் புகழைப் பாடிக்கொண்டே செல்லுகின்றனர். நீராடுவதற்குமுன் கரங்களில் மலர்களை நிறைத்துக்கொண்டு, கங்கா தேவிக்கு பூஜை செய்கிறார்கள்.

"இமவந்தம் தொடங்கி இருங்கடலளவும்
இருகரை உலகிரைத் தாடக்
கமையுடைப் பெருமைக் கங்கை......"

என்ற பெரியாழ்வாருடைய அருள் வாக்கின் உண்மையை நாம் இங்குக் காண்கின்றோம்.

சூரிய அஸ்தமன சமயத்தில் கங்கா தேவிக்கு மக்கள் பூஜை செய்கின்றனர். பலவகையான மலர்களைத் தூவி, தொன்னைகளில் கற்பூரத்தையாவது, நெய்விளக்கையாவது ஏற்றி மிதக்கவிடுகின்றார்கள். இடைவெளியில்லாது செறிந்த தீபங்களில் ஒளியும், இந்த ஒளியில் திகழும் மலர்களும் கண்களைக் கவர்கின்றன; மக்கள் மிகுந்த பக்தியுடன் கங்கா தேவியைப் பற்றிப் பாடும் கீதம் செவிகளை நிரம்புகின்றது; இவை நமது மனதை உருக்கி நம்மைப் பரவசமாக்கி விடுகின்றன. ஸ்நானக் கட்டத்திலிருந்து சுமார் 3 மைல் தொலைவில் தக்ஷ யாகம் நடந்த இடம் இருக்கிறது. இந்தத் தலம் மிகவும் புனிதமாகக் கருதப்படுகின்றது; மக்கள் இங்கும் நீராடச் செல்லுகின்றனர். ஸ்நானக் கட்டத்தினருகே ஒரு குன்றில் மாயா தேவியின் ஆலயம் ஒன்று இருக்கிறது.

ஹரித்வாரிலுள்ள கடைத்தெரு மிகவும் குறுகியது; ஒரு மைல் நீளமுள்ளது. கடைக்காரர்கள் சிலர் தமிழும் பேசுகிறார்கள். கடைகளில் நமக்கு வேண்டுவன எல்லாம் கிடைக்கும். மளிகைக் கடைகளில் அரிசி, பருப்பு வகைகள், உப்பு, மிளகாய், கோதுமை முதலியனவும், இன்னும் சில கடைகளில் மாவு வகைகளும், பச்சை ஊறுகாய்களும், காய்ந்த ஊறுகாய்களும் விற்பனைக்கு உள்ளன. பழக்கடைகளில் வாழைப் பழம், ஆரஞ்சு, ஆப்பில், திராட்சை, கொய்யா முதலிய பழங்கள் வாங்கலாம். தெருவிலுள்ள காய்கறிக் கடைகளில் எல்லா வகைக் காய்கறிகளும் கிடைக்கும்.

[தொடர்ச்சி : 49-ம் பக்கம்[

> **வை. மு. ஸ்ரீ.**யின் முதல் சிறு கதையைச் சென்ற இதழில் படித்தீர்கள். அதுபோல் அவர் **"பக்தன்"** முதல் இதழில் எழுதிய முதல் கட்டுரையை இவ்விதழில் அளிக்கிறோம்.

வை. மு. ஸ்ரீநிவாஸன், எம். ஏ. பி. எல்.

# ஒரு பக்தனின் ஸந்தேக நிவர்த்தி

பரம பக்தனான சீலமிகு சிஷ்யனொருவன் பிரதிதினமும் நகருக்கு வெளியேயுள்ள ஆசிரமத்துக்குச் சென்று அங்கு எழுந்தருளியிருந்த மகானைச் சேவித்துவருவது வழக்கம். நெடுநாளாக அத்யந்த பக்தி சிரத்தையுடன் சிச்ருஷை செய்துவரும் அச்சீடனை நோக்கி ஒரு நாள் குருதேவர் சொல்லலானார்:—

"மைந்தனே! உன் மனம் மனத்துக்கினியானை நாடுவதாகத் தோன்றுகிறது. வந்தனைக்குரிய விஷயங்களில் பக்தியுடன் சிந்தனை செலுத்துகிறாய். குருசிச்ருஷையிலும் கண்ணும் கருத்துமாயிருக்கிறாய். ஆசார நியம நிஷ்டைகளில் ஒருவிதத் தளர்ச்சியுமில்லை. வேதசாஸ்ராதிகளில் அளவற்ற நம்பிக்கை கொண்டிருக்கிறாய். எவரிடமும் த்வேஷமோ வெறுப்போ இன்றி, மனத்தாலும் தீமையோ, வஞ்சனையோ எண்ணாது இதயசுத்தியுடன் இருக்கிறாய். காமக்ரோத லோப மோக மத மாத்ஸர்யங்களைக் கண்டு நடுங்குகிறாய். மஹான்களைப் பூஜிக்கும் நீ ஞானதாகம் கொண்டுள்ளதைக் காண்கிறேன். ஆகையால், நான் உனக்கு மிகச்சிறந்த ரஹஸ்ய மந்திரத்தை உபதேசிக்கின்றேன். அது மிகவும் ஜாக்ரதையாகப் பாதுகாக்கப்படும் பரம ரகஸ்யம்: விலைமதிப்பற்ற தனம். அந்த மந்திரத்தின் சிறந்த தன்மை சிலருக்கே தெரியும். அசிரத்தையாக அதை ஒருவருக்கும் வெளியிட்டு விடாதே!"

இந்த எச்சரிக்கையுடன் சிஷ்யனின் காதுக்குள் ராம என்ற திவ்விய நாமத்தை ஓதினார். மந்திரங்களுக்குள் மிகச் சிறந்ததான இந்த ராம மந்திரத்தைக் காதெனும் வாயினால் பருகிய பரம பக்தன், அதை பக்திசிரத்தையுடன் பஜிப்பதிலேயே கண்ணும் கருத்துமாயினான்.

ஒரு நாள் கங்கையில் நீராடிவிட்டுத் திரும்பும்போது அந்த சிஷ்யனது கவனம், சற்றுத் தூரத்தில் ராம நாமத்தைத் தங்கள் உச்சஸ்தாயியில் கோஷித்துக்கொண்டிருந்த ஆயிரக் கணக்கானவர் நிரம்பிய பஜனை கோஷ்டியின்பால் சென்றது. தினமும்தான் அவன்செவியில் அத்தகைய கோஷம்விழுவது உண்டு; ஆனால், அன்றுதான் அவனது சிந்தனை கிளறிவிடப்பட்டது!

"குருதேவர் இந்த ராம மந்திரம் பரம ரஹஸ்யம், ஒருவருக்கும் வெளியிடாதே என்று எச்சரிக்கை செய்தாரே. இது சகலருக்குமல்லவோ தெரிந்திருக்கிறது! இதோ ஆயிரக்கணக்கானவர்

ஆரவாரத்துடன் கோஷிக்கிறார்களே!" என்று மனத்தில் சஞ்சலம் தோன்றியது. சந்தேக நிவர்த்திக்குக் குருதேவரிடமே சென்றான் உத்தம சிஷ்யன்; விநயத்துடன் விஷயத்தை விஜ்ஞாபித்துக் கொண்டான்.

அந்த மகாஞானி, கேள்விக்குப் பதில் அளிப்பதற்குப் பதிலாக, தனக்காக ஒரு காரியம் உடனே செய்யவேண்டுமென்று கோரினார். பளபளப்பான ஜாஜ்வல்யமான கண்ணாடி உருண்டையொன்றைக் கொடுத்து, நகருக்குள் சென்று அதன் விலைமதிப்பை அறிந்து வரும்படியும், எக்காரணம் பற்றியும் அதை யாருக்கும் விற்றுவிடக் கூடாதென்றும் சொல்லியனுப்பினார். அதன் சரியான மதிப்பு என்னவென்பதைத் தெரிந்துகொண்டு ஜாக்ரதையாகத் திரும்பி எடுத்து வந்து விடும்படி எச்சரித்தார். மறுபேச்சின்றி சிஷ்யனும் நகருக்குப் புறப்பட்டான். குருதேவர் இச்சைப்படி பணிவிடை செய்து விட்டுத்தான் தனது சந்தேகநிவர்த்தியை நாடவேண்டுமென்று தன் கடமையை உணர்ந்தான்.

கடைத்தெருவில் அவன் முதலில் கண்டது ஒருகாய்கறிக் கூடைக்காரியைத்தான். அவளிடம் குருதேவரின் கண்ணாடிப் பந்தைக் காட்டி, "என்ன விலை தருவாய்?" என்று கேட்டான். ஜ்வலிக்கும் கண்ணாடிப்பந்து என்றே அதை மதித்த அக் கிழவி, அதைத் தன்வீட்டுக் குழந்தைக்கு அழகிய விளையாட்டுப் பொருள் என அளிக்கலாமென ஆசைகொண்டாள்; அதற்குப் பண்டமாற்றாகசிலவீசை கறிகாய்கள் தருவதாகச்சொன்னாள்.

அவ்விடம் விட்டகன்று பொன்வேலை செய்யும் தட்டானொருவனிடம் சென்று அதைக் காட்டி மதிப்புக்கேட்டான். இது ஒரு சாயல் வைரம் என்று மதித்த அவன் நூறு ரூபாய் தருவதற்கு முன்வந்தான்.

மதிப்பில் வித்யாசங்களைக் கண்டு ஆச்சரியத்திற்குள்ளாகிய சிஷ்யன் நேரே ஒரு நாணய சாவகாரியிடம் சென்று விண்ணப்பித்துக்கொண்டான். 'இவ்வளவு பெரிய வஸ்து உண்மை வைரமாயிருக்கமுடியாது; இவ்வளவு பெரிய உண்மை வைரம் கிடைப்பது கஷ்டம். இது சாயல் வைரமாயினும் நம்போன்ற பெரிய பணக்காரர் கையில் உண்மை வைரமென்றே பொதுமக்களால் மதிக்கப்படும்: அதனால், வாங்குவோம்' என்றெண்ணி ஆயிரம் ரூபாய் விலை பேசினான்.

இது மிகவும் விலையுயர்ந்த வஸ்துவென்பதை அறிந்துகொண்டு, ஒரு வைரவியாபாரியிடமே சென்று காட்டினான். மிகச்சிறந்த உயர்ந்த வைரம் என்று அறிந்த அவன், 'இத்தகைய வைரத்தை இதுவரை கண்டதேயில்லை: இதைப்பற்றி சந்தேகமும் எழுகிறதே!' என்று எண்ணியவாறே ஒரு லக்ஷம் தருவதாகச் சொன்னான்.

மதிப்புக் கேட்கவே கொண்டுவந்ததாகவும் விற்பனைக்காக அல்லவென்றும் கூறிவிட்டு அந் நகருக்குள் மிகப்பிரஸித்தி

பெற்ற பெரிய வைர வியாபாரியிடம் சென்று காட்டினான் சீடன். "விலைமதிப்பற்ற வைரம்; இக்காட்டிலுள்ள ஆபரணங்களெல்லாம் சேர்ந்துகூட இதற்கு ஈடாகாது!" என்று உண்மையான மதிப்பைக் கூறினான் அந்த நிபுணன். அத்துடன் நில்லாமல் "இதை ஜாக்ரதையாகப் பாதுகாக்கவேண்டும்; விற்கக்கூடாது" என்றும் ஆலோசனை கூறினான்.

உடனே குருதேவரிடம் திரும்பினான். ஒருவராலும் அதைச் சரிவர மதிப்பிடமுடியாததை விவரமாய் விஜ்ஞாபித்துக் கொண்டான். ஜாக்ரதையாகத் திருப்பிக் கொடுத்துவிட்டு, தனது கேள்வியை ஞாபகமூட்டினான்.

"குழந்தாய்! உன் கேள்விக்கு நான் உனது இன்றைய அனுபவத்தின்மூலம் பதிலளித்து விடவில்லையா? நீ ஆழ்ந்து யோசித்து உணரவில்லை போலிருக்கிறது. அந்த வைரத்தை ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக மதிப்பிட்டதிலிருந்தே நீ உன் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொண்டிருப்பாயென எதிர்பார்த்தேன். இப்போது நான் விளக்குகிறேன், கேள். அது விலை மதிப்பற்ற உயர்ந்த வைரம் என்பதை நன்கறிந்த நிபுணனே சரிவர மதிப்பிட்டானல்லவா? மற்ற பேரெல்லாம் எவ்வளவு குறைவாக விதம்விதமாக மதித்தனர்! அதேபோல், ராம நாமம் ஓர் மறைந்து கிடக்கும் பெரும் புதையல் போன்ற விலைமதிப்பற்ற தனம். எல்லோராலும் அதை மதிப்பிட முடியாது: எல்லோருக்கும் அதன் மதிப்பு தெரியவும் தெரியாது. இந்த வைரத்தின் சரியான மதிப்பு மிகச் சிலருக்கே தெரிவதுபோல்தான், ராமநாமத்தின் சரியான தன்மை மிக மிகச் சிலருக்குத் தான் தெரியும்.

"வைரத்தின் மதிப்பு தெரியாது சில வீசை காய்கறிக்குச் சமமாக மதித்த அறிவிலியைப் போலவே, ராமநாமத்தின் உண்மை ப்ரபாவத்தை அறியாத மூடர்கள் பலரிருக்கின்றனர்; தெய்வ பக்தியிலும் உபாசனையிலும் மிகவும் குறைவுள்ளவர்களே அவர்கள். அகிலலோக நாதனை ஸ்ரீய:பதியை உள்ளபடி அறிவதற்கு அளவற்ற பக்தியும் உபாசனையும் தேவை; அவையின்றி ஸம்ஸார ஸாகரத்திலிருந்து—வாழ்வின் துயரங்களிலிருந்து—வெளியேற முடியாது. இக் கலியுகத்தில் பரமாத்மாவை அடைய அவனது நாமஸங்கீர்த்தனமே ஸாதனம். பகவான் பெயரைச் சொல்லிக்கொண்டு உண்மையுணர்வின்றி ஜீவனோபாயம் செய்து வயிறு வளர்ப்பவர்களை நாம், 'ஐயோ, பாவம்! விலைமதிப்பற்ற தனத்தைச் சாண் கும்பிக்காக, சில சில்லறைக் காசுகளுக்கு ஈடாக்கி அழிகிறார்களே!' என்று துக்கிப்போம்," என்றார்.

ஃ ஃ ஃ ஃ

நாம ஸங்கீர்த்தனத்தை வயிறுவளர்ப்பதற்காகச் செய்யக் கூடாது; அவன் கருணைக்குப் பாத்திரமாகவே அவன்

நாமத்தை ஸ்மரிக்கவேண்டும்: நாமஸ்மரணையற்றால், காற்றில்லாவிடில் தவிப்பதுபோன்று, மனம் நிம்மதியற்று இருக்கும் என்ற தூய நிலையை, நாம் உபாஸனையால் அடைய வேண்டும். தடையற்ற அவ்வாறான பஜனையால்தான் தேவரிஷி நாரதர் பரம பக்தராக விளங்குகிறார். நாம ஸங்கீர்த்தனத்தின் முக்கியமான அம்சம் என்னவென்றால், நமது பஜனைக்கு மூலப்பொருளான பகவானின் திருநாமத்தை அறிந்து ஜபித்தல்தான். ஸ்ரீ பகவான் கீதையில் தான் யக்ஞங்களுக்குள் ஜபம் (யக்ஞானாம் ஜப யக்ஞோஸ்மி) என்று கூறியுள்ளார்.

ஜபம் செய்வதில் — பிறர் கேட்கும்படி உரக்க ஜபித்தல்; நாக்கும் உதடும் அசைய, ஆனால், சப்தம் வெளிவராது உபாம்சு முறையில் ஜபித்தல்; எந்த அவயவமும் அசையாமல் சப்தமும்வெளிப்படாமல் மனத்திற்குள் ஜபித்தல்—எனமூன்று விதங்கள் உண்டு. 1000 தரம் உரக்க ஜபிப்பதும், 100 தரம் உபாம்சு முறையில் உதடு நாக்கசையச் சப்தமின்றி ஜபிப்பதும், 10 தரம் எந்த அவயமும் அசையாது மௌனமாக நிம்மதியுடன் மனமார பஜிப்பதும் ஸமபலனை யளிக்குமென்பது சாஸ்திரம்:—

விதியஜ்ஞாஜ் ஜபயஜ்ஞோ விசிஷ்டோ தசபிர்குணை: |
உபாம்சு: ஸ்யாச் சதகுண: ஸாஹஸ்ரோ மானஸ: ஸ்ம்ருத: ||

பகவந்நாம ஸங்கீர்த்தனத்தில் ஓர் சிறப்பியல்பு யாதெனில், இதர ஜபதபங்களைப்போல் எவ்விதக் கட்டுத்திட்டமுமில்லா திருப்பதுதான். சுத்தமோ அசுத்தமோ, ஆசாரமோ அனாசாரமோ, எந்தநிலையிலிருப்பினும்ஒருவன் செந்தாமரைக் கண்ணனான ஸ்ரீமந் நாராயணனுடைய திருநாமஸங்கீர்த்தனத்தைச் செய்த மாத்திரத்தில் உள்ளும் புறமும் ஒருங்கே பரிசுத்தியடையப் பெறுகிறான்.

அபவித்ர: பவித்ரோ வா ஸர்வாவஸ்தாம் கதோऽபி வா |
ய: ஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ஸ பாஹ்யாப்யந்தர சுசி: ||

தண்ணீர் உடலைத்தான் சுத்தமாக்கும். திருநாமஸங்கீர்த்தனம் ஆத்ம சுத்திக்கு அடிப்படை. கபடமற்ற இதயத்துடன் ஸ்ரீபகவானை ஸ்மரிக்கும் எந்த ஜீவனும் அப்பரமனுக்குப் பரம ப்ரியம்.

அனன்யசேதாஸ் ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யச: |
தஸ்யாஹம் ஸுலப: பார்த்த நித்ய யுக்தஸ்ய யோகின: ||

என்று கீதாசார்யன் அருளிச் செய்திருக்கிறாரல்லவா?

இத்தகைய சிந்தனையிலாழ்ந்து தெளிந்த சீடன் சந்தேக நிவர்த்தி பெற்று, "கோரிய பலனை அருளும் ராம நாமமென்னும் வைரத்தைக் கண்டு விட்டேன்; என் இதயத்தினின்றும் என் கையினின்றும் இனி அதை நழுவவிடமாட்டேன்!" என்று வாய் குளறக் கூறியவண்ணம் ஆனந்தக் கூத்தாடினான்.

# தெரிந்த தலைவி

### காட்சி 1

இடம்: சுசரிதாதேவியின் வீடு. காலம்: மாலை.

[இரு பெண்மணிகள் தயங்கிக்கொண்டே வருகின்றனர். சுசரிதா தேவி அவர்களை வரவேற்கின்றார்.]

சு. தேவி:—வாருங்கள்! வாருங்கள்!

பெண்மணி 1:—இதுதானே சுசரிதாதேவியின் வீடு?

சு. தேவி:— ஆமாம், ஆமாம்! சுசரிதாதேவி என்பதும் நான்தான், நீங்க யாருன்னு....

பெண்மணி 1:—நாங்கள் இருவரும் மாதர் முன்னேற்ற சங்கத்தின் காரியதரிசிகள், எனது பெயர் உமா; இவரது பெயர்....

பெண்மணி 2:—நளினி.

சு. தேவி:—அப்படியா! ரொம்ப சந்தோஷம்! நீங்கள் என்னைத் தேடிவந்த காரணம்....

உமா:—ஒன்றுமில்லை; வரும் வெள்ளிக்கிழமைஅன்று எங்கள் சங்கத்தின் ஆண்டு விழாவைக் கொண்டாட உத்தேசித்திருக்கிறோம். அன்று நீங்கள்தான் வந்து தலைமை வகித்து எங்களை கௌரவிக்கவேண்டும்.

சு. தேவி;—நானா (சிரிக்கின்றார்)

உமா:—ஏன்?

சு. தேவி:—இல்லை! உங்கள் சங்கத்திற்கு முற்றிலும் அறிமுகமில்லாதவள். என்னைப் போய் நீங்கள் தலைமை வகிக்கச் சொல்வதைவிட யாராவது உங்களுக்கு அறிமுகமானவரையே நீங்கள் தேர்ந்து எடுக்கலாமே!

நளினி:—(இடைமறித்து), அப்படி நீங்கள் மறுக்கவே கூடாது. உங்களால் எழுதப்பட்ட கதை என்றாலே எங்களுக்கு அளாதியான ஒரு மோகம்.

உமா:—அத்தோடேயா! சதா எங்க சங்கத்து மெம்பர்கள் உங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார்கள். நாங்கள் அனைவரும் ஒருமுகமாகத் தீர்மானித்துதான் உங்களைத் தலைமை வகிக்கக் கேட்கும்படியாக....

சு. தேவி:—ஏதோ இரண்டெழுத்து வெள்ளைக் காகிதத்தில் நான் கிறுக்கினால் அதை நீங்கள் உயர்ந்த கற்பனை என்று புகழ்கின்றீர்கள். முதன் முதலில் எனது வீட்டிற்கு வந்து நீங்கள் கேட்கும்பொழுது அதை மறுக்கவும் எனக்கு சங்கடமாக இருக்கின்றது. (சிறிது நேரம் யோசித்தபின்) அது சரி! நிகழ்ச்சி எப்போ ஆரம்பம்?

உமா:—நிகழ்ச்சி மாலை 6 மணிக்கு ஆரம்பம். நாங்கள் குறித்தநேரத்திற்கு எங்கள் சங்கத்து காரை அனுப்புகின்றோம், அதில் தாங்கள் வரலாம்,

சு. தேவி:—வேண்டாம்! வேண்டாம்! உங்களுக்கு ஏன் சிரமம்? என் காரிலேயே நான் வருகின்றேன்.

உமா:—ரொம்ப தேங்ஸ்! நாங்கள் நோட்டீஸ் அச்சடித்து வந்த உடன் உங்களுடைய விலாசத்திற்கு அனுப்புகின்றோம். அப்போ....நாங்கள் வரட்டுமா?

சு. தேவி,—ரொம்ப சரி! வணக்கம்!

இருவரும்:—வணக்கம்! [இருவரும் செல்கின்றனர்]

**காட்சி 2**

இடம்: **சுசரிதா தேவியின் வீடு.** நேரம்: **வெள்ளியன்று பிற்பகல்**

[ஏதோ படித்துக் கொண்டிருந்த சுசரிதாதேவி சட்டென்று எழுகின்றார்]

சு. தேவி:—அடாடா, மறந்தேவிட்டேனே! அந்த சங்கத்திற்கு இன்று போகவேண்டுமே! (உரக்க) சாந்தா! சாந்தா! [சாந்தா வருகின்றாள்]

சு. தேவி:—என் மேஜையின்மேல் ஒரு நோட்டீஸ் வைச்சிருப்பேன்; அதை எடுத்துண்டு வா!

சாந்தா:–(வந்து கொண்டே) இதுதானே அத்தை?

சு. தேவி:—ஆமாம், ஆமாம்! (பிரித்துப்பார்த்துவிட்டு) நல்ல வேளை நோட்டீஸையாவது பார்த்தேன். இதிலே 5 மணிக்கு ஆரம்பம் என்று போட்டிருக்கு. நான்பாட்டுக்கு 6 மணிககு ஆரம்பம் என்று நினைத்துக் கொண்டு அங்குபோய் நின்றால் அவமானம்தான்!

**காட்சி 3**

இடம்: **சங்கக் கட்டிடம்.** நேரம்: **மாலை 5 மணி.**

[ஒரு வேலைக்காரி பெருக்கிக் கொண்டிருக்கிறாள். சுசரிதாதேவி தயங்கிக்கொண்டே வருகிறார்]

சுசரிதா தேவி:—(தனக்குள்) என்ன? இங்கு ஒருத்தரையுமே காணோமே! ஒருவேளை இடம் மாறி வந்துவிட்டோமோ? இந்தப் பெண்ணை விசாரித்தால் தெரியும். (வேலைக்காரியின் அருகில் சென்று) ஏனம்மா? இங்குதானே சங்கத்தின் ஆண்டுவிழா நடக்கப் போகிறது?

வேலைக்காரி:—(அலட்சியமாக) ஆமாம்மா! எல்லாம் இங்குதான்.

சு. தேவி:—இன்னும் ஒருவருமே வரவில்லைபோலிருக்கே.

வேலைக்காரி:—(கோபத்துடன்) சும்மா அப்படிக் குந்தும்மா! என்னவோ தொண தொணக்கிட்டிருக்கையே.

சு. தேவி:—(தனக்குள்) அடே அப்பா! வரவேற்பே இவ்வளவு பலமாக இருக்கே!

[உட்காருகிறார். கால்மணி நேரம் கழித்து ஒருபெண்மணி அங்கு வந்து அவரை ஏற இறங்கப் பார்க்கிறாள்]

அப்பெண்மணி:—நீங்க யாரு? உங்களை இந்த சங்கத்தில் பார்த்ததே இல்லை போலிருக்கே.

சு. தேவி:—(கோபத்துடன்) நான்தான் இன்று... இல்லை! இந்த சங்கத்தைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்.... அது சரி! நீங்க யாரு?

விமலா:—நானு! நான் ஒரு மெம்பர் இந்த சங்கத்திலே. என் பேர் விமலா. (பெருமையுடன்) எப்பவும் நான்தான் இந்தச் சங்கத்திற்கு 'பர்ஸ்ட்' வர வழக்கம்.

சு. தேவி:—(இகழ்ச்சியுடன் கைக் கடியாரத்தைப் பார்த்தவாறு) அப்படியா! ஆனல் மணி இப்போ ஐந்தே கால் ஆகின்றது போலிருக்கே.

விமலா:—(அசட்டுச் சிரிப்புடன்) ஆமாம், இன்று என்னவோ நேரமாகிவிட்டது. அப்படியும் பாருங்களேன். உங்களைத் தவிர சங்கத்தைச் சேர்ந்தவர் யாருமே வரவில்லையே.

சு. தேவி:—அது சரி!....

விமலா:—ஆமாம்! இன்னிக்கு தலைமை வகிக்கப் போறவாளை நீங்கள் பார்த்திருக்கேளோ?

சு. தேவி:—(விஷமப் புன்னகையுடன்) இல்லை! நீங்க?

விமலா:—சரிதான்! அவளும் நானும் ஒண்ணுங்கிளாஸிலிருந்து எட்டாவது கிளாஸ்வரை ஒன்ருகப் படித்தோமே! அப்போ எல்லாம் என்னைப் பார்த்துதான் காப்பி அடிப்பாள். இப்போ என்னவோ அவளை எல்லாரும் கதை எழுதுகிருள்னுட்டு அப்படி தலையிலே தூக்கி வைச்சுப் பேசரு. சின்ன வயசிலேயே அவளுக்கு கற்பனை விசித்திரமாக ஓடும். அதனலே நாங்க எல்லாரும் அவளை அண்ட புளுகு என்றுதான் கூப்பிடுவோம்.

சு. தேவி:—எந்த ஸ்கூலில் ஒன்ருகப் படித்தீர்கள்?

விமலா:—இங்கிருந்து 50 மைல் தூரத்தில் உள்ள வெஞ்சாலபு என்னும் எங்கள் ஊரில்தான். இப்போகூட ஒரு கல்யாணத்திலே அவளைப் பார்த்தேன். அவள் என்னைக் கட்டிண்டு விடவே இல்லை. அப்போதான் நம்ப அண்டப் புளுகுதான் சுசரிதாதேவி என்பது எனக்குத்தெரிந்தது...

[இன்னெரு பெண்மணி வருகின்ருள்]

விமலா:—ஏண்டி கீதா! இவ்வளவு சாவகாசமாக வருகிருயே!

கீதா:—என்ன பண்றது விமலா? எங்க காலேஜ்லே ஒரு எங்கேஜ்மெண்ட் இருந்தது. அதான் நாழியாயிடுத்து. என்னமோ ஸ்வாரஸ்யமாப் பேசிண்டிருக்காப் போல் இருக்கே. எனக்குத் தெரியலாமா அந்த விஷயம்?

விமலா:—இவர் நம்ப சங்கத்தின் புதிய மெம்பர். இன்னிக்குத் தலைமை வகிக்கப்போற சுசரிதாதேவியைத் தெரியுமான்னுக் கேட்டார். அவள் என்னோடே படிச்சவ என்பதைத்தான் நான் சொல்லிக்கொண்டிருந்தேன்.

கீதா:—பூ! இவ்வளவுதானா?

விமலா:—ஏன் கீதா! நீ அவளைப் பார்த்திருக்கியா?

கீதா:—நன்னாக் கேட்டீங்க விமலா! போன வருஷம் எங்க அண்ணாவுக்கு சுசரிதாதேவியைக் கொடுப்பதாக இருந்து நாங்க கூடப் பெண் பார்க்கப் போனது உங்களுக்குத் தெரியும் என்றல்லவா நினைச்சிண்டிருந்தேன்.

சு. தேவி:—(தனக்குள்) முதல்வளே தேவலே போல இருக்கே! அவளாவது தன்னோடே சிநேகிதி என்று சொல்லுவதுடன் நிறுத்திக்கொண்டாள். இவள் ஒருபடி மேலேயே போய்விட்டாளே!

விமலா:—எனக்கு நீங்க பெண் பார்க்கப் போனது தெரியுமே தவிர இந்த சுசரிதா தேவிதான் அந்தப் பெண் என்பது எப்படித் தெரியும்?...அதுசரி, அப்புறம் என்ன நடந்தது?

கீதா:—அப்புறம் என்ன? அவாளும் நடையாய் நடந்தா. எங்க அண்ணாவுக்கு அவளைக் கட்டோடு பிடிக்கவே இல்லை.

சு. தேவி:—இப்பொ உங்க அண்ணாவுக்கு கல்யாணம் ஆயிடுத்தா?

விமலா:—ஆயிடுத்து, ஆயிடுத்து! அது சரி, கீதா! இப்பொ வந்திருக்காளே உங்க மன்னி, அவளை விடவா மோசமாக இருந்தா அந்த சுசரிதாதேவி?

[கீதா கோபத்துடன் விமலாவை முறைத்துப்பார்க்கிறாள்]

சு. தேவி:—ஏன் மிஸஸ் விமலா? நீங்கதான் சுசரிதா தேவியைப் பார்த்திருக்கேளே. உங்களுக்குத் தெரியாதா அவள் அழகு?

[விமலா முகத்தில் அசடு வழிகின்றது]

கீதா:—(கைகளை உதறியவாறே) ஐயையோ! "லெதர் மௌத்" வருகிறது போலிருக்கே!

விமலா:—கூடவருகிறது யாரு? மைதிலிபோலிருக்கே! இன்னிக்கு அவ ஆட்டுண்டாளா, பாவம்!

சு. தேவி:—இவா யார்?

விமலா:—இவரும் ஒரு மெம்பர்தான். இவர் வாயைத் திறந்துட்டால் மீண்டும் மூடுவதற்கு மிகவும் கஷ்டம். அதனால்தான் இவருக்கு "லெதர் மௌத்"னு பேர் வைச்சிருக்கோம்.

லெ. மௌ.:—ஏண்டி அம்மா! ஏதாவது ஆரம்பிச்சாளா இல்லையா?

விமலா:—இல்லை மாமி! உங்களுக்குக்காத்தான் காத்துண்டிருக்கோம்.

லெ.மெள.:—''சக்கிரெட்டி'' வந்துட்டாளா இல்லையா?

கீதா:—இல்லை மாமி!

சு. தேவி:—சக்கி ரெட்டி என்பவர் யார்?

கீதா:—சக்கி ரெட்டி இல்லை; செக்ரெட்ரி என்னும் வார்த்தையை இந்த மாமி ஆராய்ந்து தனது புதிய இங்கிலீஷில் சக்கிரெட்டியாக மாற்றி இருக்கிறார்!

மைதிலி:—இவர் யார் கீதா?

கீதா:—நம் சங்கத்தின் புதிய மெம்பர்.

லெ.மெள.:—ஏண்டி அம்மா நீ எங்கேருந்து வரே?

கீதா:—அதுசரி மாமி! இன்னிக்கு ஏன் உங்க பெண் வரவில்லை?

மாமி:—அவ க்ளாஸிலே நாளைக்கு ஏதோ பரீட்சையாம். அவ டீச்சர் ரொம்ப ஸ்டிக்கா திருத்துவளாம். அதுக்காக மூச்சுவிடக் கூட மறந்து படிச்சுண்டே இருக்காள்.

மைதிலி:— (கிண்டலுடன் மெதுவாக) பத்திரம்! நீங்கள் விட மறந்த மூச்சை முதலில் விடுங்கள்!

சு. தேவி:—மாமி! கேட்டேளா இந்த அதிசயத்தை? விமலாவுக்கும் கீதாவுக்கும் இன்னிக்கு தலைமை வகிக்கப் போற சுசரிதாதேவியை நன்றாகத் தெரியுமாமே!

மைதிலி:—பிரமாதம்! அவள் என்ன நம்பளைப்போல மனுஷிதானே. நம்பளுக்கு இல்லாமே அவளுக்குக் கொம்பு முளைச்சிருக்குமோ ஒருவேளை?

சு. தேவி:—(இகழ்ச்சியுடன்) ஏன்? உனக்கு அவளைத் தெரியாதா?

மைதிலி:—எனக்குத் தெரியாது. ஏன்? இந்த மாமி கூட அந்த விஷயத்தில் என் கட்சிதான்.

மாமி:—(கனைத்தவாறே) யாரு சொன்னு? அவள் எனக்குக் கிட்டிய பந்துவாக்கும்.

சு. தேவி:—(வியப்புடன்) பந்துவா?

மாமி:—ஆமாண்டி அம்மா ஆமாம்! என்னோடை சின்ன மாமியாருடைய ஓர்ப்படிக்கு நாத்தனாருடைய ஒன்றுவிட்ட அத்தானுடைய சாட்சாத் பொண்ணுக்கும் இந்த தசுரிதாவோ... அந்த சதுரிதாவோ....ஏதோ ஒரு இழவு....எல்லாம் அந்த தேவிதான்!

மைதிலி:—(நாடகபாணியில்) சபாஷ் மாமி! சபாஷ்! அந்த சுசரிதாதேவியே தற்சமயம் இங்கு இருந்தால் தனது பெயரை மாற்றிவிட்டு, உங்களது அழகிய வாயில் வெளி வந்த திருநாமமாகிய இழவுதேவியையே வைத்துக் கொண்டிருப்பாள். நமது இன்றைய ஒப்பற்ற தலைவிக்கு கிட்டிய

பந்துவாக இருந்தாலும் தங்களால் அவளது பெயரைக் கூடச் சொல்ல முடியவில்லை; அந்தோ பரிதாபம்! பரிதாபம்!

மாமி:—அவளது பெயரே அது இல்லையே முதலில்.

சு. தேவி:—(கோபத்துடன்) என்ன சொன்னீங்க?

மாமி:—ஆமாண்டி அம்மா ஆமாம்! அவளை அவ அம்மா பிரசவிச்சபொழுது அவாத்திலேயே இருந்தேன். இவளுக்கு முன்னே நிறைய குழந்தைகள் அவ அம்மா வயத்தெரிச்சலைக் கொட்டிண்டு போய்ச் சேர்ந்தது. அவளுககு என்மேலே என்னிக்கும் அலாதியா ஒரு ப்ரீதி. அதனாலே இவ பிறந்தபொழுது என் மடியிலே கொண்டுவிட்டு "மாமி! நீங்கதான் இவளை வளர்த்துத் தரவேண்டும்" சொல்லிவிட்டாள். அந்தக் குழந்தைக்கு நான் 'பிச்சி'னு பேர் வைக்கச் சொல்லி என் கையாலேயே அவளுக்கு எல்லாம் செய்து வளர்த்தேன்.

சு. தேவி:—பிச்சியாமே, பிச்சி! சகிக்கவில்லை (முணுமுணுக்கிறார்)

மைதிலி:—என் மாமி! அந்த பிச்சிதான் இன்று தலைமை வகிக்கப் போறதுன்னு எப்படித் தெரியும்?

மாமி:—நன்னாக் கேட்டே! கொஞ்ச நாள் முன்னே அவ அம்மாவோடே எங்காத்திற்கு வந்திருந்தாள். அப்பொதான் நம்பப் பிச்சிக்குதான் என்ன பேரு....நீங்க ஏதோ சொன்னீங்களே; அந்தப் பேருனு தெரிஞ்சுது. அவ்வளவு தூரம் சொல்வானேன்? நான்தானே இன்று அவளை பரிசெய்ட் பண்ண ஏற்பாடு செய்தேன்.

விமலா:—பரிசெய்டா? அப்படின்னா?

கீதா:—பரிசெய்ட் இல்லை; ப்ரிசெய்ட்,

விமலா:—ஒஹோ! (எல்லாரும் சிரிக்கின்றனர்)

மைதிலி:—இப்போ உங்களை அந்தப் பிச்சி பார்த்தால்,

மாமி:—ஓடிவந்து அப்படியே கட்டிண்டுடுவள்.

சு, தேவி:—சகோதரிகளே! நான் ஒரு வார்த்தை சொல்லலாமா?

மாமி:—கேட்பானேண்டி அம்மா? இந்தப் பாழாய்ப் போனவா ஒருத்தரும் வரவில்லையே. அதுவவரயில் ஏதாவது பேசிண்டிருப்போம்.

சு. தேவி:—இன்று தலைமை வகிக்கப் போற சுசரிதா தேவிக்கு சிறிய வயதிலேயே தாயார் இறந்து போய்விட்டதாகவும், அவளையும், அவளது ஒரே சகோதரனையும் அவளது தந்தைதான் வளர்த்ததாகவும், சிறு வயதிலிருந்தே அவள் இந்த ஊரில்தான் படித்ததாகவும், குழந்தைமுதற் கொண்டு நிச்சயிக்கப்பட்டிருந்த தனது அத்தானையே அவள் மூன்று வருடங்களுக்கு முன்பேயே மணஞ்செய்து

கொண்டுவிட்டதாகவும் நான் அறிந்திருக்கின்றேன். ஆனால், நீங்கள் வேறுவிதமாகக் கூறுகின்றீர்களே!

மாமி:—நீ எவளைச் சொல்கிறாயோ? இன்னிக்கு சங்கத்திறகு வரப்போகிறவள் நாங்க சொல்பவள்தான்.

கீதா:—(சந்தேகத்துடன்) இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?

சு. தேவி:—(வாயிலை நோக்கிச் சென்று கொண்டே) எனக்கா?....

[இரண்டு காரியதரிசிகளும் ஓடிவருவதைப் பார்த்து சட்டென்று நிறுத்திவிடுகின்றார்]

உமா:—மன்னிக்கணும்! மன்னிக்கணும்! இவ்வளவு சீக்கிரம் நீங்கள் வருவீர்களென்று....

சு. தேவி:—(இடைமறித்து) சீக்கிரமா! மணி ஐந்தே முக்கால் ஆகிவிட்டது தெரியுமோன்னோ?

நளினி:—நாங்கள் 6 மணிக்கு ஆரம்பம் என்று கூறினோமே மறந்துவிட்டீர்கள் போலிருக்கு.

சு. தேவி:—நான் நோட்டீஸில் 5 மணி என்று போட்டிருக்கவே 5 மணிக்கே வந்துவிட்டேன். பரவா இல்லை. அந்த வேலைக்காரி எனக்கு வரவேற்புரை கூறினாள். உங்களுடைய அங்கத்தினர்களே நவரசங்களில் நடித்துக் காட்டிவிட்டார்கள். வந்தனோபசாரம் கூற நீங்கள் வந்து விட்டீர்கள். நான் வருகிறேன்.

உமா:—எங்கள் சங்கத்து வழக்கத்தை உங்களுக்குக் கூறாதது தவறுதான்.

சு. தேவி:—எது வழக்கம்? நோட்டீஸில் போடுவது ஒன்று, செய்கையில் செய்வது ஒன்று? பேஷ்! பேஷ்! (கோபத்துடன் திரும்புகிறாள்).

உமா:—(அசட்டுச் சிரிப்புடன்) நீங்கள் இவ்வளவு கோபிப்பீர்களென்று தெரிந்தால், அன்றே உண்மையைக் கூறி இருப்பேன். எங்கள் அங்கத்தினர்கள் எப்பவும் குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு மணி பின்னதாகவே வருவது வழக்கம்.

நளினி:—அதனால்தான் நோட்டீஸில் 5 மணிக்கு என்று குறிப்பிட்டுவிட்டுத் தங்களிடம் உண்மையைக் கூறினோம்.

சு. தேவி:—(சமாதானமடைந்தவராய்) பரவா இல்லை! யாருக்கும் இதுவரையில் நேர்ந்திராத ஒரு புதிய அனுபவம் உங்களால்தானே உண்டாயிற்று. எனக்கே நான் நான்தானா என்னும் சந்தேகம் உண்டாகிவிட்டது.

[சிரித்துக் கொண்டே தலைமை ஆசனத்தில் உட்காருகின்றனர். லெதர்-மௌத் மாமி மெல்ல அவ்விடத்தைவிட்டே நழுவுகின்றார். மற்ற அங்கத்தினர்கள் முகத்தில் அசடு வழிகின்றது.]

# அறிவுப் போட்டி நெ. 6.



இந்த படத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் உள்ள பொருள்களை நன்றாகப் பாருங்கள். அந்த பொம்மைகளின் முதலெழுத்தையோ அதிலுள்ள பொருத்தமான எழுத்தை எடுத்துக் கொண்டு முதலிலிருந்து கடைசிவரை உருவாக்கி, ஒரு வாக்கியமாகவோ, சிறிய கதையாகவோ எழுதி அனுப்பவும். அதில் நன்றாக இருப்பதற்கு பரிசு அளிக்கப்படும். அனுப்புகிறவர்கள் இந்த படத்தையும் கிழித்து அதனுடன் அனுப்பவும்.

# அவரவர் பாக்கியம்

ஸ்ரீமதி T.C.K. மல்லிகை சுந்திரம்

"கல்லாய்ப் பிறக்கலாம், மண்ணாய் இருக்கலாம். கருவேல முள்ளாகக் கூட ஜனனமெடுக்கலாம். ஆனால், பெண்ணாக மட்டும் ஜனனமெடுக்கக்கூடாது. ஆம்.... கூடவே கூடாது... வரதட்சிணை பூதம் அவர்கள் விரும்பிய வாழ்வை வாழவிடாது...." என்று நெஞ்சு வெடிக்கத் தன்னந்தனியளாய் இருளில் முற்றத்திலமர்ந்து மௌனமாகப் புலம்பிக் கொண்டிருந்தாள் யசோதை.

"அப்பாவுக்கு மட்டும் வரதட்சிணை கொடுக்க சக்தியிருந்தால்....அத்தை தான் அந்த யோசனை சொல்ல முன் வந்திருப்பாரா.... அப்படிச் சொன்ன நாக்கை இழுத்து அறுத்து எறிந்திருக்கமாட்டாரா அப்பா!....ஆனால் இன்றைய இந்த இழிநிலை....

யசோதை வானத்தை அண்ணாந்து நோக்கினாள். மூன்றாம் பிறைச் சந்திரன், கீறிய தேங்காய்க் கீற்றைப் போல பிரகாசித்துக் கொண்டிருந்தான். வாரியிறைக்கப் பட்ட வைரமணிச் சுடர்களென்ன தாரகைகள் மின்னி மினுக்கின. அவள் உள்ளம் அந்நிலையிலும், இயற்கை அழகை ரஸித்தது. "எத்தனை கோடி இன்பங்கள் வைத்தாய் இறைவா!" என்று முணுமுணுத்தவள், அடுத்த கணமே தன்னை ஒருமுறை பார்த்துக் கொண்டாள். மனத்தில் விரக்தி மேலிட, "ஏழைகளுக்குத்தான் எத்தனை கோடி இன்னல்கள் வைத்தாய் இறைவா!" என்று புலம்பியவள், தான் செய்த முடிவை செயலாக்கத் துணிந்து எழுந்தாள்.

கொல்லைப்புறக் கதவைச் சமீபித்த அவள் மீண்டும் திரும்பிவந்து கடைசி முறையாக தன் அருமைப்பெற்றோர்களையும், சகோதரர்களையும் ஆசை தீர ஒருமுறை கனிவுடன் நோக்கினாள். கண்களில் பொங்கிய கண்ணீர் அவர்களை நன்றாகப் பார்க்கவிடாமல் ஒருபுறம் தடுத்தது; பாசம் ஒருபுறம் கால்களுக்கு வேர் ஊன்றச் செய்தது.

மனதைக் கல்லாக்கி, கால்களை பலவந்தமாக இழுத்துக் கொண்டு திரும்பிப் பாராமல் நடந்தாள் யசோதை கொல்லைப்புறத்தை நோக்கி. குளிர் காற்று அவள் தேகத்தைத் துளைத்து எலும்புக்குள் பாய்ந்து உடலை 'வெட வெட' வென்று நடுங்க வைத்தது.

முந்தானையை இழுத்து, கழுத்தோடு போர்த்திக் கொண்டாள். அவளுக்கே தன் [illegible]



183201

தது. போர்த்தியிருந்த முந்தானையை நழுவவிட்டாள். "இதோ இன்னும் சில நிமிடங்கட்குள். வேண்டாத சட்டையைக் கழற்றி வீசி எறிவதுபோல, அவள் ஜீவன், அவளது உடற்சட்டையைக் கழற்றி கிணற்றுக்குள் வீசி எறியப் போகிறது. அதற்குள் இந்த உடலுக்குத்தான் எத்தனை உணர்வு!

கிணற்றின் கைப்பிடிச் சுவர்மீது ஏறி அமர்ந்து உள்ளே பார்த்தாள். அவள் கால்களை நழுவவிடப் போகும் அந்தக்ஷணத்தில், உள்ளேயிருந்து கைக்குழந்தை வீறிடும் சப்தம், குறி வைத்து அம்புபோல அவள் ஹிருதயத்தைத் துளைத்தது. நழுவிய கால்கள் தானாகவே மீண்டும் ஊன்றிக் கொண்டன.

இரண்டு நாட்களாகவே வீட்டில் மணி அரிசி இல்லை. யாரிடமோ நேற்று கால்படி குறுணை வாங்கி, அதை கஞ்சி காய்ச்சிக் குடித்தனர். இன்றோ அதுவும் இல்லை. கொஞ்சம் விவரம் புரிந்த குழந்தைகள், தண்ணீரைக் குடித்து வயிற்றுத் தீயை தற்காலிகமாக அணைத்துக்கொண்டன! மூன்றரை வயதுக் கைக் குழந்தைக்கு என்ன தெரியும்? பசியால் துடித்துத் துடித்துச் சோர்ந்துபோய்விட்டான். அழும்போதெல்லாம், அம்மா 'எடுத்து விட்டு' எப்படியோ சமாளித்தாள். அன்னையின் வரண்ட மார்பை சுவைத்த குழந்தை பின்னும் வெறி கொண்டாற்போல வீறிட்டலறியதேயன்றி, பசி தணியவில்லை. எப்படி தணியும்! புஷ்டியான ஆகாரம், மூன்று வேளையும் வயிறு புடைக்க சாப்பிடுவோருக்கே, பால் இல்லாமல், புட்டிப்பால் போட்டு குழந்தைகள் வளரவேண்டியிருக்கிறது. அப்படியிருக்க, அம்மாவின் நிலையில்....

அம்மா கண்ணீர் விட்டுக்கொண்டே, நான் விடும் கண்ணீரெல்லாம் பாலாக இருந்தாலும், குழந்தை அதைச் சுவைத்தாவது பசியாறுமே," என்று மனம் நொந்து புலம்பியபோது, யசோதையால் தாளவே முடியவில்லை.

யசோதை சட்டென கீழே குதித்தாள். "நான் செத்தாலென்ன? என் கஷ்டம் முடிந்துவிடப்போகிறது. ஆனால் மற்றவர்கள் இருந்தும் செத்தாற்போலத்தான்— அதைவிட என்னொருத்தியால் மற்றவர்களுக்கு நல்வாழ்வு கிட்டுமானால்...." யசோதை முந்தானையை இழுத்துப் போர்த்துக்கொண்டு திரும்பினாள்.

இந்தியா—பாகிஸ்தான் பிரிவினையினால், தன் செல்வச் சம்பத்து அனைத்தையும் இழந்து படாத துன்பமெலாம் பட்டு இந்தியாவுக்கு வந்து சேர்ந்த அகதி குடும்பங்களுள் வாஞ்சிநாதனின் குடும்பமும் ஒன்றாகும்.

கராச்சியில் வாஞ்சிநாதன் சணல் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரியாக, மிகவும் செல்வாக்குடன் வாழ்ந்தார்.

எங்கிருந்தோ ஒருநாள் சூருவளிபோல வகுப்புக் கலகம் தோன்றியது. தோன்றிய க்ஷணத்திலேயே லக்ஷாதிபதியாகிய அவரை பிக்ஷாண்டியாக்கி, இந்தியாவுக்குத் துரத்தி விட்டது. எட்டு மக்களுடனும், மனைவியுடனும், அவர் படாதபாடெல்லாம் பட்டு தன் சொந்த ஊருக்கு வந்து சேர்ந்தார். எந்நிலையில்?....சித்தப்பிரமை கொண்ட நிலையில்! வாழ்ந்து கெட்டார் நிலைக்கு ஒரு உதாரணமாக இருந்தது அந்த குடும்பம்.

அவரை வாவென்று வரவேற்று உபசரிக்க உற்ருர் உறவினர் ஒருவரும் முன் வரவில்லை. கஷ்ட காலத்தில் யாருக்கு யார்.... பார்த்தவர்கள் கூட பாராதவர்கள்போல முகத்தைத் திருப்பிக்கொண்டு சென்றனர்.

தூரத்து உறவில், சிறிது செல்வ நிலையிலுள்ள அத்தை ஒருத்தியின் வீட்டிற்கு அழையா விருந்தாளியாக சென்றனர். அத்தை அவர்களுக்கு ஆச்ரயம் அளித்தாள். ஆயினும், பத்து நபர் கொண்ட குடும்பத்தை யாராலும் நெடுக தாங்கமுடியுமா? அத்தைக்கு அவர்கள் பாரம் உறைத்தது போலும். முகங்கடுத்தல், பாணம் போன்ற குத்தல் மொழிகளெல்லாம் தாராளமாக வழங்கப்பட்டன. யசோதையும் அவள் அன்னையும், இறந்த காலத்தையும், நிகழ் காலத்தையம் ஒப்பிட்டு மனம் மாழ்கினர். எதிர் காலமோ இன்னும் பயங்கரமாக இருந்தது.

யசோதைதான் குடும்பத்தில் மூத்த பெண். பதினெட்டு வயது குமரி. மற்ற பிள்ளைகளெல்லாம் சிறுசுகள் யசோதை ஸ்கூல்பைனல் பாஸ் செய்திருந்தாள். ஹிந்தி நன்ருகத் தெரியும். உபாத்தியாயினி வேலைக்கும் 'ட்ரெயினிங்' பாஸ் பண்ணியிருக்கவேண்டும். ஹிந்தியாவது நாலு 'ட்யூஷன்' சொல்லிக் கொடுத்து நாலு காசு சுயசம்பாத்யம் செய்யலாமென்ருலும், அதற்கும் ஆடம்பரமும், சாதுர்யமும் வேண்டியிருந்தது. வெள்ளை உள்ளம் படைத்த, அவள் அறிவை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளத்தான் அநேகர் முன் வந்தனர். ஊதியம் தரும் பிரச்னை எழுந்தபோது கையும் மனமும் கருணைக்கிழங்காகி விட்டன!

இச்சமயத்தில் தான் சர்க்காரிடமிருந்து ஏதோ சொற்ப உதவி கிடைத்தது. அத்துடன் அத்தையின் உதவியும் சேர்ந்து, அவர்களது உடலைக் கிடத்த ஒரு சொந்தக் குடில் கிடைத்தது. ஆனல் வயிற்றுக் கபந்தனின் பசியைத் தணிக்க வழி! பிறர் கொடுத்து ஒருவரின் தரித்திரம் தீருமா? நாலு வீடு கூலி வேலை செய்தாவது வயிறு வளர்க்க, அவர்களது குலம், வாழ்ந்த வாழ்வு கௌரவம், இடம் கொடுக்கவில்லை. பசியும் பட்டினியும்

மான உணர்ச்சியும் அவர்களது உடல்களை அணு அணுவாகத் தின்றுகொண்டிருந்தன. அத்தையும் தன் கையை சுருக்கிக் கொண்டாள்.

இக்கட்டான இந்நிலையில்தான் ஒருநாள் அத்தை, யசோதையின் கல்யாண பிரச்னையை எடுத்தாள்.

"யசோதையின் அறிவுக்கும், அழகுக்கும் எத்தனையோ பேர் போட்டிப் போட்டுக்கொண்டுக் கொத்திக் கொண்டு போய்விடுவார்கள். ஆனால்...என்று அத்தை இழுத்தாற் போலக் கூறியபோது யசோதையால் சிரிக்காமலிருக்க முடியவில்லை. "அத்தை! அப்பா சணல் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரியாக இருந்தால்" என்று ஒரு திருத்தத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள்," என்றாள்.

அத்தையின் முகத்தில் அசடு வழிந்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டாள். "நானே என் பிள்ளைக்கு யசோதையைப் பண்ணிக்கொள்வேன். ஆனால், ஜில்லா ஜட்ஜ் பெண் போன வருஷத்திலேயே நிச்சயமாகி விட்டது. பிள்ளையாண்டான் பாக்ரா—நங்கல் அணைத்திட்டத்திலே இன்ஜினியர் வேலை பண்றான். கையிலே வரதட்சிணை ரொக்கம் ஐயாயிரம். பெண்ணுக்கு காது, மூக்கு, கழுத்து, கை எல்லாவற்றிற்கும் வைரநகை ஒரு செட்டும், பொன் நகை ஒரு செட்டும் போடுகிறார்கள். மாப்பிள்ளை இன்ஜினியரோ இல்லையோ! மாப்பிள்ளைக்கு வைரக்கல் இழைத்த கெடிகாரச் செயின் போடுகிறார்களாம், தலை தீபாவளிக்கு." அத்தை முடுக்கிவிட்ட மெஷின் போல பொழிந்து கொண்டிருந்தாள். யசோதைக்கு ஒருபுறம் சிரிப்பும், பெண் வீட்டாரைப் பகற்கொள்ளையடிக்க எத்தனை வருஷமாகப் போட்ட திட்டமோ என்று நினைத்த போது அருவருப்பும் ஒருங்கே தோன்றின.

"ஏன் அத்தை! பெண் 'காலேஜ்' படிக்கிறது என்கிறீர்களே! காலேஜ் படிக்கும் பெண் மூக்குத்தி கூடவா போட்டுக் கொள்கிறாள்?" என்று ஒரு சந்தேகத்தை எழுப்பினாள்.

அத்தை பதிலளிக்க கொஞ்சம் திணறிப் போனாள். ஏனெனில், அவள் தெரிவித்த 'ஜட்ஜ் வீட்டார் சம்பந்தமே' வெறும் கற்பனைதானே! ஆனால், அப்படிப்பட்ட சம்பந்தம், தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையையொட்டி, அவள் போட்ட திட்டம் என்னவோ உண்மை. திட்டம் வெற்றிகரமாக பரிணமிக்கவேண்டுமே என்ற கவலைதான், அவளை, யசோதைக்கு வரன் தேடும் முயற்சியில் ஊக்கியது. ஏனெனில், அடுத்த மாதம் லீவில் வரப் போகும் தன் பிள்ளை, எங்கே யசோதையின் அழகில் மயங்கி, காலணா வரதட்சிணை இல்லாமல் காதல் திருமணம் செய்துகொள்ள பிடிவாதம் பிடிப்பானோ என்ற பெருங்

கவலே வேறு அவளே வாட்டியது. அவன் வருவதற்குள், யசோதையின் விவாகத்தை எப்பாடு பட்டாவது முடித்து விட வேண்டுமென்ற தீவிரம் எழுந்தது.

"மூக்குத்தி போட்டுக் கொள்வது என்ன அநாகரி கமா! அவாளெல்லாம் எவ்வளவுதான் படித்த மேதாவி களாயிருந்தாலும் பழமையையும் விடுவதில்லே." என்று ஒரு போடுபோட்டாள்.

யசோதைக்கு அத்தையின் பேச்சு அத்தனையும் கலப் படமில்லாத பொய் என்று புரிந்துவிட்டது. 'ஆம் அத்தை! அவர்கள் புதுமையை அநுசரிக்கிறவர்களா யிருந்தால் தன் பெண்ணுக்குக் காலணு வரதட்சிணை கொடுக்காமலன்ருே கல்யாணம் செய்து கொடுப்பார்கள்."

அத்தை அத்தோடு அப்பேச்சை விட்டுவிட்டு யசோ தைக்குத் தான் பார்த்திருக்கும் வரனேப்பற்றிப் பேச்சை எடுத்தாள்.

அவள் எந்த வரனுக்காக, இத்தனே பீடிகை போட்டுக் கொண்டு சிபார்சு செய்தாளோ, அந்த வரனேப் பற்றிய விவரத்தைக் கேட்டபோது, அம்மாவும் பெண்ணும் இடிந்தே போய்விட்டனர். அத்தை எளிதில் இரங்குபவ ளாகயில்லே. அவர்களது தற்கால நிலேயை அக்கு அக்காக அலசி ஆராய்ந்து, யோசனேகளேயும் உபதேசங்களேயும் மணி மணியாக உதிர்த்தாள்.

"எனக்கும் சொல்லவே நாவெழவில்லேதான். ஆயி னும், என் செய்வது? நம் சமூகம் அறிவிலும் அந்தஸ் திலும், எவ்வளவுதான் முன்னேறி இருந்தாலும், சாஸ் திரம், சம்பிரதாயம் என்பதிலெல்லாம், பழைய ஆசாரப் படிதானே நடக்கிருர்கள்? உன் அப்பா நன்ருய் வாழ்ந்த காலத்தில், உன் கல்யாணம் நடந்திருந்தால், அப்பொழுது அது விஷயம் வேறு. இப்பொழுது கூட கையில் ஆயிரம் வரதட்சிணே கொடுத்து, வேண்டிய சீர் செனத்திகளெல் லாம் ஐயாயிரத்திற்கு குறையாது செய்தால், ஒரு 'எஸ்' எஸ்.எல்.ஸி' யோ, 'எப்.ஏ.' யோ கிடைப்பான். இன்னும் நம் சமூகம் அழகுக்கும், அறிவுக்கும் மதிப்புக் கொடுத்து, காலணு வரதட்சிணேயில்லாமல் மணந்து கொள்ளும் வரம்பு வரை முன்னேறவில்லே. பிள்ளேகள் வாங்கியிருக்கும் பட்டத்தைப் பொறுத்தன்ருே, வரதட்சிணேயின் தொகை யும் நீளுகிறது." அத்தை தன்னேயே ஒருமுறை மேலும் கீழும் பார்த்துக்கொண்டாள்.

யசோதையின் வயிறும் நெஞ்சும் திகுதிகுவெனப் பற்றி எரிந்தது. ஹோவெனக் கதறவேண்டும்போலிருந் தது. 'அத்தையின் கல் நெஞ்சு தன் கதறலால் மட்டும் நெகிழ்ந்துவிடாது' என்று அவள் மிக யத்தனம் செய்து அழுகையை அடக்கிக் கொண்டாள்.

கண்களிலிருந்து மட்டும் கண்ணீர் 'டப் டப்' என்று உதிர்ந்தது.

"உன் அப்பாவின் நிலையோ அதல பாதாளத்திற்குச் சரிந்துவிட்டது. நீ மட்டும் இந்த வரனுக்குச் சம்மதித்தால், உன்னொருத்தியால் குடும்ப கஷ்டம் தீரும். மற்ற உன் உடன் பிறந்தவர்களின் வாழ்க்கையையும் செப்பனிட உதவி செய்யலாம். அப்புறம் வறுமையின் நிழல் நீங்கள் இருக்கும் பக்கம் கூட சாயாது. நன்ருக யோசித்து, இரண்டொரு நாளில் முடிவைக் கூறு, யசோதை" என்று வார்த்தைகளை அளந்து பேசிவிட்டுப் போய்விட்டாள், அத்தை.

யசோதை யோசித்தாள்; யோசித்தாள். அவளுக்கு வாழ்வு வேண்டும்தான்! ஆனல் எப்படிப்பட்ட வாழ்வு? "வரதட்சிணை பூதத்தின் அடங்காத் தாகத்திற்கு என் வாழ்வு இரையாகவேண்டுமா? ஏ! வரதட்சிணை பூதமே! என் போன்ற இளமங்கையர் விரும்பும் வாழ்வைத் தட்டிப் பறித்துக்கொண்டு, அவர்கள் விரும்பாத வாழ்வை, பலவந்தமாக அவர்கள் கையில் திணித்து பாழுங்கிணற்றில் தள்ளுவதுபோல, தள்ளும் உன் கொடுமை, என்று தணியுமோ! என்று ஒழியுமோ! சாஸ்திரம், சம்பிரதாயம் என்ற நிழலில் பதுங்கிக்கொண்டு எத்தனை நாள் இன்னும் உன் லீலைகளை நடத்திக்கொண்டிருக்கப்போகிருயோ! யசோதை மணிக்கணக்காக யோசித்தாள். மூளை குழம்பியது. அன்னையிடமாவது யோசனை கேட்கலாமென்ருலோ, அவள், வாளாவிருப்பதிலிருந்தே இப்பிரச்னையின் தீர்ப்பை தன் முடிவுக்கே விட்டுவிட்டாளென்றுதான் தெரிகிறதே! தந்தையோ கேட்கும் நிலையிலுமில்லை, சொல்லும் நிலையிலுமில்லை. இரண்டுநாள் நாற்பத்தெட்டு மணி நேரம் கண் துஞ்சாது யோசனை செய்ததின் விளைவு, "அந்த 'வாழ்வை' மனமுவந்து ஏற்றுக் கொள்வதைவிட இந்த வாழ்வை முடித்துக் கொள்வதுதான் சாலச் சிறந்தது" என்ற முடிவுக்கு வந்தாள்.

கொல்லைப்புறம் இருந்து வந்தவள், குழந்தையைத் தோளில் போட்டுத் தட்டிக் கொடுத்துக்கொண்டு முற்றத்தில் நிற்கும் அன்னையைப் பார்த்ததும் ஏனே அவளுக்கு தான் செய்யவிருந்த செயலின் பயங்கரமும், துக்கமும் அலைமோதிக் கொண்டு எழுந்தன.

"யசோ! இருட்டில் எங்கேயம்மா கொல்லைப் பக்கம் போய் வருகிருய்?" அன்னையின் குரல் மெலிந்து இருந்தது. சீவனற்ற அந்தக் குரலில் இருந்த நடுக்கமும், வேதனையும் அவள் உயிரையே போய் கவ்விப் பிடித்தது. குழந்தையை அன்னையிடமிருந்து வாங்கிக் கொண்டாள்.

அன்னை அப்படியே கீழே அமர்ந்தவள், மயங்கிக் கீழே சாய்ந்து விட்டாள். யசோதை திடுக்கிட்டுப் போக

வில்லை. அவளுக்குத் தெரியாதா இது பட்டினி மயக்கம் என்று!

யசோதை தன் பூரண சம்மதத்தை தெரிவித்தபோது அத்தை வியப்புக் கடலாடவில்லை. எதிர்பார்த்தவளைப் போல, "யசோதை புத்திசாலி" என்று இரண்டே வார்த்தைகளில் தன் பாராட்டுதலை தெரிவித்துவிட்டு மேற்கொண்டு காரியங்களை கிரியாம்சையில் நிறைவேற்ற முனைந்தாள்.

ஆனல் ஊர்வாய் அவல் இல்லாமலேயே மென்றது. 'லட்சம் லட்சமாக சொத்து. ஒரே பிள்ளை. பின்னே கசக்குமா...." "என்னதான் சொத்து இருந்தாலும்.... அந்தப் பெண் முழுமனத்துடன் எப்படித்தான் சம்மதித்ததோ...." "அத்தைக்காரிதான் ஏதோ தகல்பாஜி வேலை செய்திருக்கிருள். பெண் வீட்டாருக்கு உண்மை தெரியாது...." என்று அநீதியை நசுக்க வரிந்து கட்டிக்கொண்டு வந்தது. ஆனல், யசோதை வீட்டார், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று கூறியபோது, 'பிறருக்கு வாத்தியாராக' வரிந்து கட்டிக்கொண்டு வந்த சமூகம் வாயடைத்து வந்த வழியே திரும்பியது.

தை மாதம் ஒரு சுபயோக சுபதினத்தில் பாஸ்கரன் யசோதையின் கழுத்தில் மாங்கல்யத்தைப் பூட்டும்போது, அவள் அதை பரிபூரண திருப்தியுடனேயே ஏற்றுக்கொண்டாள்.

யசோதையை பெண் பார்த்துவிட்டு, நிச்சயிக்க வந்த பாஸ்கரனின் அன்னை அவளை நெஞ்சோடு சேர்த்து அணைத்துக்கொண்டு, "நீ ஒன்றுக்கும் ஆயாஸப்படாதே அம்மா! என் பிள்ளை உத்தமன். என்னவோ! பூர்வ சென்ம கர்ம பலன். மாதா பிதா செய்த வினை மக்கள் தலையில் என்றபடி, அவன் தலையில் அது விடிந்துவிட்டது. நீதான் இனி அவனுக்கு தாய், தாரம் எல்லாம். கண்ணில்லாதவனுக்கு ஒளியாகவும், ஊன்றுகோலாகவும், இருந்து எங்கள் வம்ச விளக்கை பிரகாசிக்கச் செய்யவேண்டியது உன் கடமை அம்மா!" என்று தழுதழுத்துக் கூறிய போது, யசோதை நெஞ்சுருகிவிட்டாள். அவள் மனத்தில் எங்கோ ஓர் மூலையில் விழுந்திருந்த விரிசல் புரசல் எல்லாம் அக்கணமே மறைந்துவிட்டது.

வரதட்சிணை பிரச்னைமட்டும் எழாதிருந்தால் அவள் ஒரு வேளை அந்தகனைமணக்க நிச்சயம்சம்மதித்திருக்கமாட்டாள். ஆனல் இப்பொழுதோ, அவள் ஒருத்தியின் தியாகத்தினல், இரு குடும்பங்களன்றோ பிரகாசிக்கப் போகிறது.

"எல்லாம் அவரவர் பாக்கியம்" என்ற எண்ணமே அவள் மனத்திற்குச் சாந்தியை அளித்தது.

# அறிஞர்களின் அமுதவாக்கு

அஸ்வின்

(21) சத்தியத்தையும், கடவுளையும் பிரிக்க இந்த உலகத்தில் ஒருவராலும் முடியாது. இரண்டும் பூவும், மணமும் போன்றதாகும். —மகாத்மா.

(22) சங்கீதத்தின் சக்தி என்னைப் பறவையாக்கி ஆகாயத்திற்குத் தூக்கிச் செல்கிறது.
—திரு. ராகவாச்சாரியார்.

(23) பகலையும், இரவையும் ஆளுகின்ற நட்சத்திரங் களும், சூரியனும் ஆகாயத்தில் எவ்வளவு உறுதியாய் அமைக் கப்பட்டிருக்கின்றனவோ, அதே மாதிரியாக கண்ணியம் என்னும் குணமானது அவ்வளவு உயர்ந்த நிலைமையில் அமைக்கப்பட வேண்டும். —ரஸ்கின்.

(24) சிறிய நாய்கள் பல்லைக் காட்டும் போதுகூட மதிக்கப்படுகிறதில்லை. ஆனால் சிங்கம் கர்ஜிக்கும்போது பலிஷ்டர்கள்கூட நடுங்குகிறார்கள். —ஷேக்ஸ்பியர்.

(25) வாழ்க்கைக்கு உபயோகமுள்ளதோடு கூட இன்றியமையாததுமான பரிசுத்த வஸ்துக்கள் மூன்று உள்ளன: அவைகளை அடையாதவரையில் ஒருவனுக்கும் எப்படி ஜீவிப்பதென்பது தெரியாது. அவையாவன— புகழ்தல், நம்பிக்கை, அன்பு. —ரஸ்கின்.

(26) நல்ல குணத்தை விரும்புகிறவன் தனக்குள் நல்ல தேவதைகளை நிறுத்திக் கொள்கிறான். பூஜிக்கத் தக்கதை பூஜிக்கிறான். அவன் கடவுளோடு வசிப்பவனா கிறான். —எமர்சன்.

(27) மனோதுக்கத்தைப் போக்கடிக்கும் குணங்களா கிய மூலிகைகள் தெய்வலோக நீரோடைகளின் கரையில் முளைக்கின்றன. இதை நம்பு —லாங்பெல்லோ.

(28) தாழ்ந்த ஜீவன்களிடத்தில் இரக்கம் வைப்ப தால் உன்னைத் தாழ்த்திக் கொள்வதாக எண்ணாதே. அவைகளிடத்தில் நீ இரக்கம் காண்பிக்காவிட்டால் மேலானவைகளிடத்தில் உன்னால் இரக்கம் காட்டுவதற்கு முடியாது. —ரஸ்கின்.

(29) இந்த உலகத்தில் ஒரு மனிதனுடைய முதற் கடமையானது தனக்கு உண்மையான ஆசிரியனைக் கண்டு அடைந்து அவனுக்குத் தன் நன்மையின்பொருட்டு கீழ்ப் படிதலாம். மேலும், தனக்கு உண்மையான கீழோர்களைக் கண்டு அவர்களின் நன்மைக்காக அவர்களைத் தன் கீழ்ப்படுத்திக் கொள்வதாம். —ரஸ்கின்

# வாழ்க்கையில் ஒரு குறிப்பு

"தாயே! உங்களுக்கு திக்கு நோக்கி வணக்கத்தைச் செலுத்துகிறேன். வருஷம் மூன்று ரூபாய் கட்டி ஜகன்மோகினி வாங்கிப் படிக்க சக்தியற்ற எனக்கு ஆசைமட்டும் கோணிகொள்ளவில்லை! என் சினேகிதையிடமிருந்து தவறாது படித்துவருகிறேன். "வாழ்க்கையில் ஒரு குறிப்பு" எங்கள் எல்லோரையும் வசீகரப்படுத்தும் பத்தியாகும். அதைப் படிக்கும்போது என் சொந்த விஷயத்தையும் சொல்லாமவிருக்க முடியவில்லை.

மோகினியில் சில மாதங்களாக வந்துக்கொண்டிருக்கும் அறிவுப்போட்டியைப் படித்து நாங்கள் உண்மையில் சந்தோஷப்படுகிறோம். இதே போன்ற அறிவுப்போட்டியில்லாது, இதர அறிவுப்போட்டிகளினால் எங்கள் குடும்பமே நாசமாகி விட்டதென்றால் மிகையாகாது. ஆயிரக்கணக்கான ரூபாய், சில சமயம் அரைலக்ஷம், ஒரு லக்ஷம்கூட பரிசாக வழங்கப்படும் என்கிற மாய மந்திரப்போட்டிகள் நம் நாட்டுத் தலைவிதியால் 'புத்திலிருந்து ஈசல் கிளம்புகிறதுபோல்' கிளம்பி இருக்கிறதே. அந்த வகையராக்களுக்கே என் கணவர் அடிமையாகிவிட்டார். அவர் அதிகப் படிப்பாளியல்ல. சாதாரண S. S. L. C. தான்; டைப்பு அடிப்பார். ஏதோ கம்பெனியில் 95 ரூபாய் தான் சம்பளம்; வீட்டுவாடகையோ 15 ரூபாய்; மிச்சமுள்ளதில் போட்டிப் பரிசுக்கு விடையனுப்பவும் பத்திரிகைகள் வாங்கவும் கூப்பனின் எண்ணிக்கைகளைப் பெருக்கவுமே போதாமல் திண்டாடுகையில் வீட்டிற்குப்பணமேது? நானும் கொஞ்சநாள் பொறுத்துப் பார்த்தேன். ஹிதமாகச்சொல்லிப் பார்த்தேன். இரண்டு குழந்தைகளும் நானும் அரைப் பட்டிணி சகஜமாகி முழுபட்டிணிக்கும் ஒத்திகை பார்க்கும் நிலையில் வந்தபிறகு அவரிடம் சண்டை இடவே துணிந்தேன். வீட்டில் 10 ரூபாய் விலை மதிக்கும் சாமான்கள் வரையில் விற்றும் அடகுவைத்தும் ஓட்டாண்டியாகிவிட்டது. நான் சண்டைபோடும்போது அவர் கோபிக்காமல், "பொறுமையாய் இரு, ராஜம்! நமக்கு ஓரேயடியால் லக்ஷக்கணக்கில் பரிசு வந்துவிடப்போகிறது" என்று சொல்லும்போது காளிதேவிபோல் ஆத்திரம் வரும். "லக்ஷக்கணக்கில்தானா வரும்! இருக்கிற மூன்று உயிர்களும் போய்விட்டபிறகு கோடிக்கணக்கில் கூடவரும்! நீங்கள் நவீன குசேலராகிவிடலாம்....குபேரனேயாகிவிடலாம்! இன்றைய பட்டிணிக்கு வழி என்ன...நான் பிச்சையெடுக்கவேண்டியதுதானா?" என்று தினம் மிகவும் கத்தி இறைந்து சண்டை போட்டுவிட்டேன்.

அதே சமயம் அவருடைய உயிர்ச் சினேகிதரின் 8 வயது பையன் அழுதுகொண்டே ஓடிவந்து, "மாமா! எங்க அப்பா உங்களைக் கூப்பிடுகிறார்" என்றான். உடனே

இருவரும் ஓடிவிட்டனர். என்னவோ! ஏதோ! என்று எனக்குக் கலக்கமாயிருந்தது. அந்தப் பையனின் தாயரை எனக்குத் தெரியும். ஆகையால் நான் உடனே மனது கேட்காமல் ஓடிப் போனேன். அவர்கள் வீட்டில் ஒரே அமர்களமாயிருந்தது.

விசாரித்ததில்—இவரது சிநேகிதர் எப்படியிருப்பார்—அவருக்கு 5 குழந்தைகள்; 140 ரூபாய் சம்பளத்தில் இவரைப் போலவே ஊரிலுள்ள போட்டிகள் எல்லாவற்றிற்கும் கட்டிக்கொண்டு வீட்டையே கவனியாது இருந்துவிட்டாராம். அந்தம்மாளும் என்னைப்போல் எத்தனை முட்டிக்கொண்டும் கேளாமல் பட்டினிக்கொடுமையால் அவருடைய 4 வயது பிள்ளைக் குழந்தைக்கு மகத்தான உடம்புக்கு வந்து ஆஸ்பத்திரிக்குக்கொண்டுவிட்டுவிட்டார்களாம்...குழந்தையின் நிலைமை எப்படியோ! சந்தேகந்தான்....என்று சொல்லியதைக் கேட்டதும், அந்தம்மாள் மனமுடைந்து ஏதோ விஷத்தைக் குடித்துவிட்டார்களாம்! அவர்களும் குத்துயிர் குலை உயிராக ஆஸ்பத்ரியில் கிடக்கிறார்களாம்—என்றதைக் கேட்டதும்...என் கதியும் இப்படித்தான் என்று முடிந்துவிடப்போகிறதோ!... என்று என் இதயம் உடைந்துவிட்டது.

பகவானின் செயலில் உள்ள அற்புதமும் அறியமுடியாத லீலாவினோதமும் சொல்லமுடியுமா? ஒரு தாக்குதலைக் காட்டி மற்றொரு நன்மையைச் செய்வதே அவனுடைய சொரூபமல்லவா! வை. மு. கோ. கதைகளில் வருவதுபோல ஒவ்வொன்றும் நூற்றுக்கு நூறு சில விடங்களில் பலித்தே தீருகிறது! அதைப் படிக்கும்போது வியப்புற்ற நானே நேரில் அறிந்து அனுபவித்தபோது கடவுளின் உண்மையை அறிந்தேன். அந்த அதிர்ச்சியின் பலனால் என் கணவர் அன்றே இந்தத் தொத்து வியாதி மோகத்தை விட்டுவிட்டார். கடவுள் கிருபையினால் அவர் சிநேகிதருடைய குழந்தை பிழைத்துவிட்டது. ஆனால் அந்தம்மாள் திகாபலியாகிக் குடும்பத்தைக் காத்தாள் ....என்றுதான் சொல்லவேண்டும். இந்த வருஷந்தான் தீபாவளிக்கு 20 ரூபாயில் புதுப்புடவை எனக்கு என் கணவர் வாங்கிக்கொடுத்தது, 200 ரூபாய் தகடி சேலை கொடுத்ததுபோன்ற பெருமை அளித்தது; நீங்கள் வெளியிடும் அறிவுப் போட்டியினால் இத்தகைய பயங்கரம் ஆபத்துக்கள் எதுவுமில்லாது பொழுதுபோக்குதற்கும் அறிவு வளர்வதற்குமே பயன்படுவதைப் பாராட்டுகிறேன்.

—உண்மை விளம்பி

ஜகன்மோகினி: 33-ம் ஆண்டு, 1956

தனிப்பிரதி அணா 4.

வருடச் சந்தா ரூ. 3

# கிருஹலக்ஷ்மி

(கன்னட நாவல் சுருக்கம்)

மூல எழுத்தாளர்: **ஸ்ரீமான் அ. நா. கிருஷ்ணராவ்.**

மொழிபெயர்ப்பாளர்: **ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்.**

[பிப்ரவரி இதழ்த் தொடர்ச்சி]

## அத்தியாயம் 2.

தாலூக்காக் கச்சேரியின் பணிக்கு, எல்லாவிதங்களிலும் ஜயராவ் தகுதியுடையவராக இருக்கவில்லை. அவருடையகாரியநிர்வாகத்தின் விஷயமாக யாருக்கும் சந்தேகமோ அசமாதானமோ இல்லாவிடினும்மேல்வரும்படியில் கைபோடாமல், ஜயராவ் பலருடைய கோபத்திற்குள்ளானர். ஜயராவின் இம்சையைப் பொறுக்கமுடியாமல் ('அமல்தார்' என்று மைசூர் சம்ஸ்தானத்தில் பெயரிட்டு அழைப்பார்கள்) தாசீல்தார்கள் பலர் வேரிடங்களுக்கு மாற்றிக்கொண்டு போனதுமுண்டு. ஜமாபந்திகாலத்திலுங் கூட ஊராரிடம் ஜயராவ் ஒரு ஆழாக்கு பாலைக்கூட சும்மா வாங்கினதில்லை. தாசீல்தாருக்கும், அவருடைய பரிவாரங்களுக்கும் தானே சமைத்துப் போடுவார்; ஊரில் பால், தயிர், கறிகாய் வாங்க வேண்டி வந்தால், தம் கைப் பணத்தைச் செலவழிப்பார்.

ஜயராவின் பரம ச்நேகிதரான ப்ளீடர் அச்சுதப்பா ஒரு தடவை கேட்டார்:

"நீங்கள் எந்த நக்ஷத்திரத்தில் பிறந்தயள் ஜயராவ்?"

"ஏன் சுவாமீ?"

"இவ்விதம் பிரயத்தின பூர்வமாக ஏழ்மையை முடிபோட்டுக் கொள்பவர்களை நான் பார்த்ததே இல்லை. இருபது வருஷம் சர்விஸ் செய்திருக்கயள்—என்ன பயன்?"

"லஞ்சம்—கிஞ்சம் வாங்கி ஆஸ்த்தி சேர்த்திருக்க வேண்டும் என்பது உங்கள் அபிப்பிராயமா?"

"இல்லை, ஜயராவ்! நீங்களும் குழந்தைகுட்டிக்காரர்; நாளைக்குப் பையனை........"

"பால் சாப்பிட்ட குழந்தைகளே பிழைப்பதரிது. இன்னும், விஷம் சாப்பிட்ட குழந்தைகள் பிழைக்குமா, அச்சுதப்பா? என் குழந்தைகளுக்கு நான் லௌகிகமான ஆஸ்தி வைப்பதில்லை. என் சக்திக்கு மீறி மாதுவை படிக்க வைப்பேன்; அவனுடைய சாப்பாட்டை அவன் நியாயமாக சம்பாதித்துக் கொள்ளட்டும்; இன்னும்

பெண்ணின் கலியாணம் தானே—கடவுள் எப்படியோ பண்ணிவைப்பான். குழந்தைகளுக்குப் பெரியதொரு ஆஸ்தி வைக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன், அச்சுதப்பா!"

"அதென்ன ஆஸ்தியப்பா, எனக்குத் தெரியாமல் உள்ளுக்குள்ளாகவேசின்னஞ்சிறு முடிப்புவைத்திருக்கயளா?"

"சின்னஞ்சிறு முடிப்பு இல்லை—பெரிய முடிப்புதான்—பகவத் பக்தி, தீனசேவை, சத்திய வாழ்வு....இவற்றை விடப்பெரிய ஆஸ்தி வேண்டுமா, சுவாமீ?"

ஆடம்பரம், அட்டஹாசங்களுக்கு மயங்காத உண்மையான எளிய வாழ்க்கையை ஜயராவ் நடத்தி வந்தார். தன் வாழ்வின் வெகு பங்கை பகவத் சேவையில் கழித்தவராய், எஞ்சியதை குடும்ப சிந்தனைக்கு வினியோகித்தார்.

பிளீடர் அச்சுதப்பாவும், மிராசுதார் ராமலிங்கய்யாவும் ராயரின் அக்கம்பக்கத்து வீடுகளில் வசிப்பவர்கள். அச்சுதப்பா வேண்டியபடி சம்பாதித்து விட்டு நிம்மதியாக இருந்தார். ராமலிங்கய்யாவுக்கும் தொல்லைகள் ஒன்றுமில்லை.

ஃ ஃ ஃ ஃ

ஒரு வெள்ளிக்கிழமை ராயர் கோயிலிலிருந்து வீட்டுக்குத் திரும்பிய பொழுது ஆச்சாரியரும் லக்ஷ்மண ராவும் வந்தார்கள். ராயர் அவர்களை ஆதரவுடன் வரவேற்றார். குசலபிரச்னைகள் நடந்தபிறகு அவர்கள் இருவரும் தன் வீட்டிலேயே சாப்பிடவேண்டும் என்று ஜயராவ் பிடிவாதம் செய்தார். அன்று கச்சேரிக்கு வருவதில்லையென்றும் சொல்லி அனுப்பி விட்டார். எல்லோரும் சாப்பிட்ட பிறகு, தாம்பூலம் தரிக்கும்பொழுது ராயர், "இதென்ன இவ்வளவு தூரம் வந்தபடி?....ஏழையின் வீட்டுக்கு பாக்கியலக்ஷ்மி வந்தமாதிரி" என்று கேட்டார்.

"காரியமாக வந்திருக்கிறோம் ராயரே!"

"சொல்லுங்கள்; என் கைய்யால் ஆவதாக விருந்தால் கட்டாயம் செய்து கொடுக்கிறேன்."

"உங்களுக்கு புட்டசோமன ஹள்ளி வெங்கடராவை தெரிந்திருக்கலாம்."

"புண்ணியவான்! அவரைப்பற்றி யாருக்குதான் தெரியாது, ஆச்சார்வாள்! அவர்எங்களுக்கு தூரத்து உறவுகூட."

"அவருடைய தங்கையைதான் எனக்குக் கொடுத்து கலியாணமாயிருக்கு" என்று லக்ஷ்மணராவ் சொன்னார்.

"ரொம்ப சந்தோஷம் அவரைப் போன்ற தர்மிஷ்டனை இனி நாம் பார்க்க முடியாது சுவாமி! கலியுகத்தை கிருதயுகம் செய்த புண்ணியவான் அவர்.

"உங்களுடன் சம்பந்தம் செய்யவேண்டும் என்று லக்ஷ்மணராவ் வந்திருக்கார்"

"தெய்வ சித்தம் இருந்தால் ஆகட்டுமே!"

"வெங்கடராவுக்கு ஒரே பெண். அந்தப் பெண்ணின் கலியாணத்தை இந்த வருஷம் செய்ய வேண்டும் என்பது அவருடைய தாயாரின் விருப்பம். உங்கள் பிள்ளைக்குதான் கொடுக்க வேண்டும் என்று வெங்கடராவ் நினைத்து கொண்டிருந்தாராம்"

"பெண்ணுக்கு என்ன வயது?"

"பன்னிரெண்டு"

"என் பிள்ளை சின்னவனுயிற்றே ஆச்சார்வாள்".

"அவனுடைய வயது?"

"பதினறு".

"ஆகலாமே."

"இன்னும் நாலைந்து வருஷம் அவனை படிக்க வைக்கலாம் என்றஎண்ணம். நான் ஒரு சுதாமன். குழந்தைகளுக்கு ஆஸ்தி எதுவும் கிடைக்கப் போவதில்லை. கல்வி தான் அவர்களுக்கு ஆஸ்தி".

"கலியாணத்திற்கு பிறகும் படிக்க வைக்கலாமே; நாலைந்து வருடங்களுக்குப் பிறகு சாந்தி கலியாணம் செய்தால் போச்சு."

"வெங்கடராவ் போன பிறகு அவருடைய குடும்பம் ரொம்பவும் கஷ்ட்டத்தில் அகப்பட்டு கொண்டதாகக் கேள்விப்பட்டேன்."

வெங்கடராவின் குடும்பக் கதையை லக்ஷ்மணராவ் ஆதியோடந்தமாக விவரித்து சொல்லிவிட்டு, "இப்பொழுது எல்லாம் ஒரு நிலைக்கு வந்து விட்டது." என்றார்.

"இரண்டு பிள்ளைகளின் விவரமும் தெரியவில்லையா?"

"அவர்கள் ரங்கூனில் இருக்கிறார்களாம் ஆனல் கடிதப் போக்குவரத்து காணேம்.

"எதற்கும் நீங்கள் கவலைப்படவேண்டாம் ஜயராவ். வைபவமாகக் கலியாணம் செய்வார்கள். இரண்டு பக்கச் செலவையும் அவாளேவகித்துக்கொள்ளச்சித்தமாக இருக்கிறார்கள். பெண்ணுக்கு நிறைய நகைநட்டுகள் போட்டு கன்னிகாதானம் செய்து தகுந்தபடி வரோபசாரமும் செய்வார்கள்."

ஆச்சாரின் வார்த்தைகள் ஜயராவின் உள்ளத்தை புண்படுத்தின. கணப்பொழுது மௌனமாக இருந்துவிட்டு, ஜயராவ், "ஆச்சார்வாள்! நான் சொன்னதை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்று தோன்றுகிறது. வெங்கடராவின் பார்யை, தம் மகளை எங்கள் வீட்டில் கொடுக்க எண்ணி இருப்பதே பெரிது. எங்கள் வீட்டு மங்கள லக்ஷ்மியாகும் நாட்டுப் பெண் வரும்பொழுது

# மேனாட்டுத் தத்துவம்

## இரண்டாம் பாகம்

## பிளேட்டோ கண்ட சமயம்

ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

பிப்ரவரி இதழ்த் தொடர்ச்சி

*தன்னைத் தியாகம் செய்ய வேண்டாம்; மனிதன் பூர்ணத்தை அடைந்தால் போதும். பிருகிருதிக்கும் ஆத்மாவுக்கும் போராட்டமன்று; சேர்க்கையே இன்பத்தை நல்கும். நம்முடைய ஆத்மாவும் நமக்குப் பெரிதன்று; இதைவிட மேலானது ஒன்று இருக்கிறது. எல்லா ஆத்மாக்களும், பிருகிருதியும் அவனுக்குச் சரீரமாயிருக்கின்றன. உலகமனைத்தையும் சரீரமாயுள்ள ஆண்டவனே நாம் வணங்கும் கடவுளாவார்.

"உடன்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன்" என்று பாடிய நம்மாழ்வாரின் அடி நம் மனத்தே எழும் என்பதில் சந்தேகமில்லை. நாமெல்லோரும் தெய்வத்தன்மை அடைந்தவர்கள். ஞானத்தைப் பெற்றோமானால், தெய்வங்களோடு நாமும் ஒரு தெய்வமாகி, தேவநாதனோடு அமர்ந்து, இவ்வுலகத்தில் காணக்கூடாத அழகைப் பருகி ஆண்டவனுடைய குணங்களைத் திமா

---

*Not self-sacrifece, ,but fulfilment, the flesh and the spirit in league to - gether, 'not in arms against one another; And each mau shall know that he is part of the Greater body, each man shall know that his own Soul is not supreme even to himself, that all souls of all things do but compose the body of God, and that God indeed shall be.

---

அற்பமான நகைநட்டுகளை விரும்புவேன் என்று நினைத்துக் கொண்டீரா? அவர்கள் ஒரு துளசி தளத்தை வைத்து கன்னிகாதானம் செய்து கொடுத்தாலும் சந்தோஷம்."

ஆச்சாரியர் தலைகுனிந்தபடி உட்கார்ந்து விட்டார். லக்ஷ்மணராவ் நிலைமையை சமாளிப்பதற்காக, "தங்கள் விருப்பம்போல் ஆகட்டும் சுவாமி" என்றார்.

ஜாதகம் பொருந்தினபடியே இரு குடும்பங்களின் மனப்பொருத்தமும் கூடியது. ஜயராவ் விருந்தினரை மறுநாளும் நிறுத்திக்கொண்டார். கோதுபாய் (கோதாவரிபாய்) விருந்து சமையல் செய்து எல்லோருக்கும் பரிமாறினாள்.

சாப்பிட்ட பிறகு ராயர் லக்ஷ்மணராவுக்கு வெற்றிலை பாக்கு கொடுத்தார். ஆச்சாரியருக்கு வெற்றிலை பாக்குடன் கூட ஒரு அங்கவஸ்திரமும் கொடுக்கப்பட்டது. ஆச்சாரியரும், லக்ஷ்மணராவும் சந்தோஷமாக சாயந்திர பஸ்ஸில் சோமனஹள்ளிக்குப் பயணமானார்கள்.

(தொடரும்)

னித்து நிற்போம். நமது ஆசாபாசங்கள் நம்மைக் கீழே தள்ளப் பார்க்கின்றன. அவைகளின் தளைகளை அறுத்தெறிந்தோமானால், தெய்வங்களைப்போல மாசற்ற கண்களோடு உலகத்தைப் பார்க்க முடியும். தெய்வங்களுடைய ஞான ஒளிக் கண்ணின்மீது மேக நிழல் விழுகிறதில்லை. இதுதான் நம்முடைய ஞானத்திற்கும் பரமாத்மாவின் ஞானத்திற்குமுள்ள வேறுபாடாகும். தெய்வங்கள் நம்மோடு நெருங்கி நின்றாலும் ஒரு தேவதையின் உபாசனை மூலமாக அவைகளின் அருளைப் பெறலாம் என்பதைசாக்ரடீஸ்ஸின் வாழ்க்கை மூலம் நாம் அறிகின்றோம். ஒரு தேவதையின் குரல் அவர் காதில் ஒலிக்கக் கேட்டிருக்கிறோமன்றோ.

பகவான் தனித்து உதாசினமாய் நிற்கவில்லை. நம்முடைய ஒவ்வொரு செயலையும் அவன் கவனித்து வருகின்றான். எல்லா வற்றையும் கவனித்துவருகின்ற ஆட்சியில் அக்கிரமக்காரர்கள் தழைக்கக் காண்கின்றோமே என்று ஒரு கேள்வியை எழுப்பலாம். அதற்கு பிளேட்டோ அளிக்கின்ற சமாதானம் இதுதான்: அவ ரவர் தீவினை நல்வினைக்கேற்றவாறு உடலும் அமைந்தது. பலஜன் மங்கள் எடுத்துதான் அவன்விடுதலைபெறுகின்றான என்று அவர் கூறுகின்றார். இக்கருத்து கீதையில் கோயில்கொண்டிருப்பதை நாம் அறிவோம். ஆண்டவன் ஞானத்தை அளித்திருக்கிறான். அவரவர் பாவபுண்ணியங்களுக்குப் பொறுப்பாளிகள் அவர்களே. பகவான் இவைகளுக்குப் பொறுப்பாளி அல்லன் என்றதைப் பிளேட்டோ வற்புறுத்திப் பேசுகின்றார். பூர்வ ஜன்மங்களை நம் நினைவுக்குக்கொண்டுவர முடியும். எல்லா அறிவும் முன்பு நுகர்ந்த அனுபவத்தின் நினைவே. பகவானைப்பற்றி ஏன் சிந்திக்கிறோம்? என்று, ஒருவர் கேட்கலாம். அவனோடு ஒரு காலத்தில் சேர்ந்து உறைந்திருக்கிறோம் என்றுதான் பிளேட்டோவிடமிருந்து பதில் எழும். சரீரம் எடுத்ததின் பலன் அதை வைத்துக்கொண்டு பிறவிக்கடலை நீந்துவதற்கே. ஒவ்வொரு பிறவியும் நம்மைச் செம்மைப்படுத்திக்கொள்ளும்பொருட்டு ஏற்படுத்தப்பட்ட சீர் திருத்தம் செய்யும் பிறவியாகும். பல பிறவிகளில் படித்துத் தேர்ந்தபிறகே, நாம் ஆண்டவன் திருவடி நிழலை அடையக்கூடிய பாக்கியத்தைப் பெறுகின்றோம். நம் நீண்ட யாத்திரையில் பல துறைமுகங்களைக் கூர்ந்து ஆண்டவன் அருளாந்துறைமை இறுதியில் சேர்கின்றோம் என்று தாகூர் பகருகினறார்.

நம்முடைய சுவரூபத்தை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு முதிர்ந்த அறிவே சிறந்த கருவியாகும். அவ்வறிவை வைத்துக்கொண்டு அகமனத்தைத் துருவி ஆராய்ந்து பார்ப்பதுதான் சான்றோர்களின் முயற்சி என்று கூறு வார்கள். தன்னைத்தான் அறிகின்ற நிலைகூட ஆண்டவன் அரு ளால்தான் வருமென்று பிளேட்டோ மொழிகின்றார்.

அவனை அடைவதற்கு அவனைப்போல ஆகவேண்டும். இது ஒருநாளில் ஆகின்ற காரியமன்று. கொஞ்சம் கொஞ்சமாகவே முன்னேற முடியும். இடையறாத தவத்தை மேற்கொண்டு இன்னல்களைப் பொருட்படுத்தாது அடிபெயர்த்து வைப்பவன் தான் ஒரு வீரன் என்று சாற்றலாம். எப்படி ஆண்டவன் இருள் சூழ்ந்த உருவற்ற உலகத்தில் ஓர் ஒழுங்கை அமைத்துக் காட்

டிருக்கின்றானோ, அப்படியே குழப்பம் நிறைந்த நம் வாழ்க்கையில் —அபஸ்வரம் மண்டிக் கிடக்கும் நம் வாழ்க்கையில்—நாமும் ஓர் ஒழுங்கை அமைத்து, ஓர் இசையை எழுப்பி உய்யவேண்டும்.

தனித்த தியானத்தாலும், (Private worship) சேர்ந்து தொழுவதாலும், (Public worship) இறைவனை அடைய முடியும். இளைஞரும், முதியோர்களும் குறிப்பிட்ட காலங்களில் தொழுவது மிகச் சாலவும் நன்று. அப்பொழுது சமுதாயத்திற்கு ஓர் உயர்வு ஏற்படும்; மேலும் மக்கள் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் வாய்க்கும்.

பால் எல்மர் மோர் என்பவர் பிளேட்டோவின் மதத்தைத் துருவி ஆராய்ந்திருக்கிறார்.

உலகத்தில் காணப்படும் ஒழுங்கைக் கண்டு இதற்கு ஒரு படைப்போன் இருக்க வேண்டும் என்று கிறிஸ்துவர்கள் நம்புகின்றனர். பல பிறப்புக்களில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. ஆனால் பிளேட்டோ ஆத்மாவுக்குப் பல பிறப்புக்களுண்டு. அது ஈறில் இன்ப வெள்ளத்தை நண்ணுகின்றது. ஆண்டவனுடைய சுவரூபத்தைப்போல அடைந்து உலகத்தில் தோன்றாத வனப்பையும், இன்பத்தையும் பருகிக் களிக்கின்றது. மேலும் ஒரு காலத்தில் பகவானோடு இருந்த ஞாபகம் அதற்கு வருகின்றது. ஏதோ கர்மவசத்தால் ஆண்டவனிடமிருந்து ஒரு பிரிவு ஏற்படுகிறது. அவனை மீண்டும் அடைய நீண்ட யாத்திரை செய்கிறது. இந்தச் சுருதியில் பிளேட்டோ பேசுகின்றார். *'பின் வாங்குதல்'' (Retreat) என்ற கவிதையில், 'வான்'(Vaughan) இதே கருத்தை மிகக் கவின் பெற அமைத்திருக்கிறார். இவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றியே 'வேட்ஸ்வோர்த்' ‡(Wordsworth) இசைக்கின்றார் என்பது சொல்லாமலேயே விளங்கும். பிளேட்டோ கொண்ட சமயத்தைத் துருவிப் பார்த்தால் பிளேட்டோ விசிஷ்டாத்வைத சமயத்தைப் பின்பற்றுகிற வைணவனோ அல்லது சைவனோ என்று கருதும்படி இருக்கிறது. உயர்ந்த கருத்து ஒரு நாட்டிற்குமட்டும் சொந்தமன்று என்றதை மாந்தர்கள் உணர்ந்தால் போதும்.

---

*Happy those early days, when
'Shined in my Angel - infancy!'

∴ ∴ ∴

'O! how I long to travel back
And tread again that ancient track!
That I might oncemore reach that plain,
Where first I left my glorious train'.

Retreat —**Vaughan.**

‡Our birth is but a sleep and a forgetting:
The Soul that rises with us, our life's Star,
Hath had elsewhere its setting,
And cometh from afar:
Not in entire forgetfulness,
And not in utter nakedness,
But trailing clouds of glory do we come
From God, who is our home:

(Intimations of Immortality; From the Collections of Early Childhood:)—**Wordsworth.**

# அநுதாபச் செய்திகள்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஸகோதரி,

இன்று பேபரில் விஷயமறிந்து நாங்களெல்லாம் ரொம்ப ரொம்ப அதிர்ச்சியடைந்துவிட்டோம். எங்களால் நம்பவேமுடிய வில்லை. இதை நம்ப ரொம்ப நேரமாகிவிட்டது.

எப்பொழுதுமே, சதாசர்வகாலமும் பகவானையே நம்பியிருந்த தங்களுக்கு இந்த மாதிரியான ஒரு கஷ்டம் வந்தது எங்களா லேயே தாங்கமுடியவில்லை. தங்களுக்கு எந்த விதத்திலும் ஆறு தல் சொல்ல வார்த்தைகளே இடையாது.

கண்ணன் உங்கள் மனஸுக்கு சாந்தியளிக்கப் பிரார்த்திக் கிறோம்.

இங்கனம்,

(கஸ்தூரிபா மாதர் சங்கம்
கும்பகோணம்)

ராஜலக்ஷிமி வீரராகவன்
லக்ஷ்மி சாரங்கன்
எஸ். லெக்ஷிமி
அலமேலு நடராஜன்.

பிப்ரவரி மாதம் 9ந் தேதி அன்று சங்கத்து உபதேச கமிட்டி காரியதரிசியும், சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமதி வை. மு. கோதை நாயகி அம்மாள் அவர்களின் ஒரே புத்திரனுமான ஸ்ரீமான் வை. மு. ஸ்ரீநிவாசன் அவர்களின் அகால மறைவைக் குறித்து ஸ்ரீமதி கனகம்மாள் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

சங்கம் ஆரம்பித்ததிலிருந்து அவர் சங்கத்து முன்னேற் றத்திற்காக தன்னுடைய முக்கியமான வேலைகளுக்கு நடுவில் பல துறைகளிலும் பாடுபட்டிருக்கிறார். சங்கத்திற்கு சொந்தக் கட்டி டம் ஏற்பட்டதற்கும் அவரே முக்கிய காரணமாயிருந்தவர். இன் னும் எவ்வளவோ காலம் இருந்து குடும்பத்திற்கும் சங்கத்திற்கும் உதவவேண்டிய மனிதர் இத்தனை சிறுவயதிலேயே அகால மர ணம் அடைந்ததைக் குறித்து சங்கத்தின் அங்கத்தினர் அனை வருக்கும் தாங்கமுடியாத துக்கமாயிருக்கிறது. அவரது அருமை மனைவிக்கும், ஆராத்துயரத்தில் ஆழ்ந்த மாதாபிதாவுக்கும், குழந் தைகள் முதலிய மற்ற குடும்பத்தினருக்கும் எங்களுடைய அனு தாபத்தை தெரிவிக்கிறோம். அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(திருவல்லிக்கேணி) மஹாத்மாஜி சேவா சங்கம்.

அம்மையே,

தங்கள் குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் வருந்தத்தக்க செய் தியை பத்திரிகை வாயிலாக அறிந்து மிகவும் வருந்துகிறோம். தங்களைப் போன்ற பெரியவர்களுக்கு நாங்கள் என்ன சமாதானம் சொல்வது. என் சார்பிலும் எனது சர்வ சேவா சங்க தொண் டர்களின் சார்பிலும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித் துக் கொள்ளுகிறோம். வணக்கம்.

(சென்னை) அகில பாரத சர்வ சேவா சங்கம்.

அருமைச் சகோதரியாருக்கு,

தங்கள் அருமந்த மைந்தன் காலஞ்சென்ற செய்தி அறிந்து பெரிதும் துயரம் அடைந்தேன். முதுமைப் பருவத்தில் உற்ற துணையாக இருக்கவேண்டிய நற்றவப் புதல்வனை இழந்துவிட்ட தங்களுக்கு நான் என்ன ஆறுதல் கூறக்கூடும்? ஆண்டவனே தங்களுக்கு ஆறுதல் அளிக்கவேண்டும்.

உடம்பே நம்மைவிட்டு மறைந்தது. உயிர்—ஆத்மா என்றும் நித்தியமானது—அறிவானது—என்ற பரம சத்தியமும் தங்களுக்கு ஆறுதல் அளிக்கவேண்டும்.

(குரோம்பேட்டை) பரலி சு. நெல்லையப்பன்.

பத்திரிகையிலிருந்து செய்தியை அறிந்தோம். நம்ப முடியவில்லை. உங்களது பெரும் துக்கத்திற்கு ஆறுதல் கூறுவது மிகவும் கஷ்டம். அவ்வளவு பெரிய துயரம் இது. இதைத் தாங்கிக்கொள்ளத் தேவையான வேதாந்த நோக்கையும், விவேகத்தையும் உங்களை சோதிப்பதுபோல் தோன்றும் அதே பகவான் அளிப்பார் என்று நம்பும் உங்களது ஆயிரமாயிரம் நண்பர்களில் நாங்களும் இரண்டு பேர். சாந்தா

(தார்வார்) கு. ப. ரங்காச்சாரி.

அம்மணி,

கடந்த ஞாயிறன்று காலையில் அருணோதயத்தைக் காணவில்லை நாங்கள். அஸ்தமனத்தைதான் கண்டோம். அதுவும் எப்பேர்ப்பட்ட அஸ்தமனம்? அபிமன்யுவை ஒத்து இளவயதிலேயே உறவினரை துயரக்கடலில் ஆழ்த்திவிட்டு மறைந்தார் தங்களது திருக்குமாரர். தாங்கள் என்னை இதுவரையில் பார்த்ததில்லை. ஆயினும் தங்களைப் பற்றி பழக்கம் இல்லாதிருந்தும் நன்கு அறிந்துள்ளேன். தெய்வ நம்பிக்கை என்பதற்கே தாங்கள்தான் வழிகாட்டியாக இருக்கிறீர்கள். தங்களது குடும்பமே இலட்சியக் குடும்பமாக இருந்தது. ஆயினும் பகவான் தங்களையும் சோதித்துவிட்டார் எனபதை நினைக்கும்பொழுது எங்களுக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. உலகத்திற்கே உதவும் உத்தமரை உள்ளடக்கி வைக்கவும் மனம் கொண்டானே இந்த பகவான்! பழக்கம் இல்லாதிருந்தும் எங்களால் தாளமுடியவில்லை. தாங்கள் எப்படிதான் இதைப் பொறுக்கின்றீர்களோ? கேவலம் இந்த கடிதமோ, அன்றி எங்களது ஆறுதல் வார்த்தைகளோ, தற்சமயம் தங்களைச் சூழ்ந்திருக்கும் புத்திரசோகம் என்னும் தீயை அணைக்கும் என்று நான் கருதவில்லை. ஆயினும் ஏழையின் கண்ணீரைவிட நல்லவரின் கண்ணீர் மிகுந்த சக்தி கொண்டது. தங்கள் கண் கலங்கும் என்று நினைக்கும் பொழுதே நானும் எனது நண்பர்களும் கடிதமூலமாகவாவது தங்களுக்கு ஆறுதல் சொல்வது என்று நினைத்து எழுதத் துணிந்தோம். தங்கள் குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கவும். தாங்கள் எவ்வளவு துயரம் இதனால் அநுபவித்தாலும், நீங்கள் அதை

வெளிக்காட்டினால் மற்றவர்கள் தைரியத்தைக் கட்டாயம் இழந்து விடுவார்கள். மறைந்தவரது ஆத்மா சாந்தியடையட்டும்.

(சென்னை) மோகினிப்பிரியன்.

அன்புள்ள மாமிக்கு,

இங்கு இன்றுகாலை வை. மு. ஸ்ரீ. நம்மை விட்டுப் பிரிந்ததை படித்து மிகவும் வருத்தமடைகிறேன்.

என் போன்ற சிறுவனால் எழுத்தினாலோ பேச்சினாலோ உங்களுக்கும், மாமா, பத்மா, மாமி முதலியவர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் மனத்துயரத்தை ஆற்றமுடியாது.

எல்லாம் வல்ல கீதாசார்யன் ஒருவனே உங்களுக்கு ஆறுதல் சொல்லமுடியும். இதற்குமேல் எனக்கு ஒன்றும் எழுதத் தோன்றவில்லை. இப்படிக்கு,

(காகினாடா) கேசவன்.

திருமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் அவர்களுக்கு,

மூர்மார்க்கெட் ஸ்ரீ கெங்கை விநாயகம் பக்தஜன சபையார் எழுதிக்கொண்டது :— தங்களுடைய குமாரர் சீனிவாசன் அவர்கள் ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமிகள் திருவடி அடைந்ததாக எங்களுடைய அன்பர் நேற்று தங்களுக்குப் பத்திரிகை கொடுத்தபோது மேற்படி செய்தி தெரிந்ததாக எங்களுக்கு தெரிவித்தார். அன்னார் ஆத்மா சாந்தியடைவதற்கும் அன்னாருடைய குடும்பத்திற்கும் எங்களுடைய அனுதாபத்தை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு,

(சென்னை) ஸ்ரீ கெங்கை விநாயக பக்தஜன சபையார்

கோதை சித்தி சித்தியாவுக்கு தண்டன் ஸமர்ப்பித்த விண்ணப்பம்: அதிர்ச்சியைக் கொடுக்கும் இந்த விஷயத்தை அறிந்ததிலிருந்து எங்கள் மனம் நிலையில்லாமல் தவிக்கிறது. இந்த மஹத்தான சோகத்தைத் தாங்க தெய்வம்தான் பலம் கொடுக்க வேண்டும். அனுதாப வார்த்தைகளால் ஆற்றமுடியாவிடினும் காலம்தான் மழுங்கச் செய்யவேண்டும். குழந்தைகளுடைய நலனுக்காக இந்த சோதனையை மனோ திடத்துடன் ஏற்க வேண்டியுள்ளது. இந்தமாதிரி ஒரு கடிதம் எழுதவேண்டி இருக்கும் என்று கனவிலும் எண்ணவில்லை. என்னுடைய துர்பாக்கியம் தான் என்று எண்ணுகிறேன் எழுதவேண்டுவது. எவ்வளவோ விதங்களில் இடைத்தற்கரியவன்.

'நலமந்தமில்லதோர் நாடே பெறுவீர்' என்று (பட்டரின் தாயார்) ஆண்டாள் பட்டரை வாழ்த்தினதாகவும், 'அம்மா, அடியேன் வேண்டுவது ஈதே' என்று அவர் முகமலர்ச்சியோடு சொன்னதாகவும் சரித்திரம் உண்டு. அந்த மனத்தெளிவு நமக்கு பிறக்காதெனினும் இந்தமாதிரி ஸமயங்களில் இவைகளை நினைத்து மனம் தேறவேண்டும். அவன் ஏற்படுத்தும் துக்கத்தைத் துடைக்க அவனே அருள்புரிய வேண்டும். விண்ணப்பம்,

(அண்ணாமலை நகர்) பட்டண்ணா.

தங்களுக்கு நேர்ந்த அதிர்ச்சிகரமான துயரத்தைப் பற்றி கேள்வியுற்றதிலிருந்து மனச் சஞ்சலத்தை அடக்கமுடியவில்லை. எப்படி ஆறுதல் சொல்லமுடியும் என்று விளங்கவேயில்லை. தங்களுடைய கணவரையும் தங்களையும் போன்ற உத்தம தம்பதிகளுக்கு இத்தகைய குறை ஏற்படுவது பொறுக்கமுடியாத சம்பவம். ஜகத்பிதாவும் ஜகன்மாதாவும் ஜகத்ரக்ஷகனும் ஜகத்குருவுமான கண்ணன் தான் ஆறுதல் அளிக்கவேணும். அவனையே தான் சரணடையவேணும். அடித்த கைதான் அணைக்கும். உங்களுக்கே இது நன்கு தெரியும். பரிவால் கூறுகிறேன்.

தங்கள் சகோதரன்,

(சென்னை) கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி.

பிரியமுள்ள கோதைநாயகி அவர்களுக்கு :— உங்களுக்கு இந்த மகத்தான துக்கம் திடீரென்று ஏற்பட்டது கேட்க எங்களுக்கு முதலில் நம்பிக்கையே இல்லை. பிறகு 2, 3 இடத்தில் விசாரித்துத் தெரித்துகொண்டோம். வயதான தாய்—தந்தையரையும், சின்ன வயதான மனைவியையும், 5 இளம் குழந்தைகளையும் இப்படி அனாதரவாய் விட்டுவிட்டு ஒரே பிள்ளையான உங்கள் பிள்ளை போனது ரொம்ப வருத்தமாய் எங்களுக்கே இருக்கு. உங்களுக்கெல்லாம் தாங்கமுடியாதிருக்கும். நீங்கள் எவ்வளவோ அரிய தொண்டுகள் செய்தும், நாவல்கள், பத்திரிகைகள் எழுதியும், உங்கள் சங்கத்தில் பல நல்ல விஷயங்களை நடப்பித்தும் வருகிறீர்கள். அப்படிப்பட்ட உங்களுக்கு இப்படி கஷ்டம் ஏற்படவேண்டுமா? என்ன சோதனை! உங்கள் வேலைகள் எல்லாவற்றிலும் ஒத்தாசையாய் உங்கள் பிள்ளையிருந்து வந்தது எங்களுக்கு தெரியும். அவர் போனது உங்களுக்கு கையொடிந்தமாதிரியிருக்குமே. நன்ருய் சம்பாதித்து வயதான பெற்ருேரையும், பால்ய சம்சாரத்தையும் காப்பாற்றவேண்டிய நல்ல வயதுக் காளை இப்படிப் போய்விட்டாரே. உங்களை நேரில் பார்க்க இப்ப ஆரம்பத்தில் ரொம்ப கஷ்டமாயிருக்குமென்று கடிதமூலமாய் எங்கள் மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிருேம். இந்த மகத்தான துக்கத்தை தாங்க உங்கள் எல்லோருக்கும் சக்தியை பகவான்தான் கொடுக்கவேணுமாய் வேண்டுகிருேம்.

இப்படிக்கு பிரிய,

(சென்னை) சாவித்ரியம்மா.

கோதைக்கு தண்டம் ஸமர்ப்பித்த விண்ணப்பம். பகவான் பெரிய கல்லை புரட்டித் தலையில் தள்ளியதுபோல் இருக்கிறது கடிதத்தைப் படித்ததும். 90 வயது கிழங்கள் எல்லாம் இருக்க, சின்ன வயசுக்காரர்கள்தான் அவன் கண்ணில் பட்டாற்போல் இருக்கிறது. என்னுல் நம்பவே முடியவில்லை. உனக்கும் சித்தியாவிற்கும் தீராத புத்திர சோகத்தை கொடுத்துவிட்டான் பகவான். மன்னியின் வாழ்விற்கு ஒரு சோதனையை செய்து விட்டான். என்னுல் இந்த துன்பத்தை தாளமுடியவில்லை. என்ன எழுதுவதென்றே எனக்கு தெரியவில்லை. கிட்ட இருந்தால் எல்

லோரையும் பார்த்து கதறினாலும் மனம் சாந்தியடையுமோ என்னவோ. நினைக்கும்போதெல்லாம் துக்கம் வயிற்றிலிருந்து பீறிக்கொண்டு வருகிறது. என்றால் இந்த விஷயத்தை நம்பவே முடியவில்லை. மனதை என்ன திடப்படுத்தினாலும் துக்கம் வருகிறது இந்த துன்பம் வருமென்று நான் கனவில்கூட நினைத்தது இடையாது. எங்களுக்கெல்லாம் கேட்கும்போதே இப்படியிருக்கு. உன்னால் எப்படிதான் முடியும்? புழுவாய் துடிப்பாய். அதை நினைக்க என்னால் தாளவே முடியவில்லை. அந்த கிதாசார் இப்படிப்பட்டவரைத்தான் பெரும் சோதனை செய்கிறான். உன்னையும் சித்தியாவையும் நினைக்கும்போது புத்திரசோகத்துடன் ஏங்கும் முகம் என் கண் முன் தோற்றமளிக்கிறது. எல்லாவற்றையும் நினைக்கும்போது பறந்து வந்து பார்க்கமாட்டோமா என்றிருக்கிறது. எனக்கு ஒன்றுமே எழுதத் தெரியவில்லை. தப்பு இருந்தாலும் மன்னிக்கவும். அழுகைதான் வருகிறது. வேறு ஒன்றும் தோன்றவில்லை.

இப்படிக்கு,
(பூனா) ஸரோஜா.

ஸௌ. ஸ்ரீ விஜயலக்ஷ்மி கஸ்தூரி இருவருக்கும் அநேக ஆசீர்வாதம். உங்கள் எல்லோருக்கும் பொறுக்கமுடியாத துன்பம் பகவத் சோதனையால் நேர்ந்து விட்டதைக் கேட்க எனக்கு மிகவும் தாங்கமுடியாத துக்கம் வருகிறது. நீங்கள்தான் அம்மா, தாத்தா, பாட்டி எல்லோரையும் தேற்றவேண்டும். இப்படி நேரும் என்று நாங்கள் கனவில்கூட நினைக்கவில்லை. தீராத துக்கத்தைக் கொடுத்துவிட்டு அப்பா மீளாத தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டார். இருந்தாலும் மனதை அதிகம் தளரவிடாதே.

இப்படிக்கு,
(பூனா) உன் அத்தை.

சகோதரி வை. மு. கோதைநாயகி அம்மாள் அவர்களுக்கு: தங்களுக்கு ஏற்பட்ட புத்திரசோகத்தை பேபரில் பார்த்து கிழக்கு தாம்பர மாதர் சங்கத்தினர் மிகவும் வருந்துகிறோம், எங்களுடைய அனுதாபத்தையும் தெரிவிக்கிறோம். இப்படிக்கு, தலைவி
(தாம்பரம்) புஷ்பம் துரைசாமி.

அன்புள்ள சகோதரி கோதையம்மா அவர்களுக்கு: உங்கள் அருமை குமாரன் இவ்வுலகைவிட்டு மறைந்த விஷயத்தைப் பேப்பரில் பார்த்து நடுக்கிட்டோம். உங்களுடைய ஒரே கண்ணை கடவுள் பறித்துப்போனதை நினைக்க மனம் பொறுக்கவில்லை. விவேயாகிய உங்களுக்கு நான் ஒன்றும் எழுதவேண்டியதில்லை. இனி நீங்களும் உங்கள் கணவரும மனதை தைரியப்படுத்திக்கொண்டு உங்கள் நாட்டுப் பெண்ணுக்கும் குழந்தைகளுக்கும் தைரியம் சொல்லிக்கொண்டு அவர்களுக்கு ஆதரவாக இருக்கவேண்டும் என்று ஆண்டவனை பிரார்த்திக்கிறேன். உங்கள் எல்லோருக்கும் எங்கள் அனுதாபத்தைத் தெரிவிக்கிறேன். உங்கள் குமாரனின் ஆன்மா சாந்தியடையுமாக. இப்படிக்கு,
(திருச்சி) கல்யாணி அம்மாள்.

ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாள் அவர்களுக்கு : செய்தி அறிந்தோம். வாழ்க்கைப்படகினிலே உல்லாசமாக சென்று கொண்டிருந்தபொழுது புயல் வீசிற்று. காரிருள் சூழ்ந்தது. இடி இடித்தது. பிறகு திடீரென அமைதி. ஆனால் படகு கவிழ்ந்ததா? இல்லை. படகோட்டியைக் காணவில்லை. அகண்ட ஆழத்திலே ஆண்டவனுடன் சேர்ந்து விட்டான். படகிலுள்ளவர் அலறினர். கொந்தளிப்பு குறைந்தாலும் மன நிம்மதி இல்லை. சின்னஞ்சிறு குஞ்சுகள் அப்பா என்றலறின. படகு தத்தளிக்க ஆரம்பித்தது. கண்ணீர் வடித்துக்கொண்டிருந்த படகோட்டியின் மனைவி துடுப்பை எடுத்தாள். படகோட்டியின் தாய் (ஆம் அவள் தான்) ஈன்றெடுத்த மகனை ஈவிரக்கமின்றி பிடுங்கிக் கொண்ட பார்த்தசாரதியை துதித்துவிட்டு குழந்தைகளை அணைத்துக்கொண்டு நங்கூரத்தைப் பாய்ச்ச நேரம் பார்க்கலானாள். தங்கள் மகனை நாங்கள் நன்றாக அறிவோம். பெண்களுக்காகவும், தமிழ் வளர்ச்சிக்காகவும் அவர் செய்துவந்த தொண்டுகள் அனேகம். இன்னும் சில வருடங்களில் தங்களை மிஞ்சியும் இருப்பார். விதிசெய்த சதி இதுதான். நீங்கள் எங்கள் தாய் போல, உங்கள் மகன் எங்கள் சகோதரர்போல; எங்கள் சுகதுக்கங்களில் பங்கெடுத்துக்கொண்டிருந்தார்; அவர் ஆன்மா சாந்தி அடையும்; இது திண்ணம். நீங்களும் உங்கள் மருமகளும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, அவர் குழந்தைகளை பார்த்துக் கொள்ளவேணுமாய் பிரார்த்திக்கின்றோம். உங்களுக்கு வேண்டிய தைரியத்தை ஸ்ரீ பார்த்தசாரதி அருள்வாராக.

இப்படிக்கு தங்கள்,

(பங்களூர்) கே. வேதவல்லி.

P. B. கிருஷ்ணஸாமி

அன்பார்ந்த காரியதரிசி அவர்களுக்கு: 11-2-56-ல் நடந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

சென்னையில் மாது ஸ்ரீ அம்புஜம்மாளுடைய கணவர் காலமானதைப் பற்றியும், ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாளுடைய குமாரர் ஸ்ரீனிவாஸன் அவர்கள் அகாலமரணம் அடைந்ததைப் பற்றியும் இச்சங்கம் தங்கள் அநுதாபத்தை மேற்படியார்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறது. இங்ஙனம்,

(கும்பகோணம்) கஸ்தூரிபா மாதர் சங்கம்.

13-2-'56-ல் நடைபெற்ற சேலம் இந்திய மாதர் சங்கக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பெண்கள் முன்னேற்றத்திற்கும், தேச நலத்திற்கும், "ஜகன் மோகினி" என்ற பத்திரிகை நடத்தியவரும், மற்றும் உயரிய கருத்துக்கள் அடங்கிய கதைகள் பல இயற்றியவரும், சமீபத்தில் கும்பகோணத்தில் நடைபெற்ற 10-வது தமிழ்நாடு மாதர் மகாநாட்டிலும் கலந்து சிறந்த முறையில் பணியாற்றியவரு

மான ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மையார் அவர்களின் ஏக புதல்வர் திடீரென மரணமடைந்ததைக் குறித்து வருந்துவதுடன், ஆழ்ந்த அனுதாபத்தை திருமதி வை. மு. கோதைநாயகி அம்மையார் அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறது. இங்ஙனம்,

(சேலம்) இந்திய மாதர் சங்கம்.

அன்புள்ள அம்மா அவர்களுக்கு அநேக நமஸ்காரங்கள். நான் காலஞ்சென்ற ஸ்ரீரங்கம் பத்திரிகாசிரியர் எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு அவர்களின் புதல்வன். என்னுடைய சிறுவயதில் தங்களைக் கண்டிருக்கிறேன்.

சென்னையில் நாவலாசிரியர் ஜே. ஆர். ரங்கராஜு அவர்களது குடும்பத்திலிருந்து எனக்கு இன்று வந்த கடிதத்தில் தங்கள் திருக்குமாரர் இறந்துவிட்டதாக எழுதியிருக்கிறது. படிக்க அளவற்ற துயரமடைகிறேன். சுமார் 22 ஆண்டுகளுக்கு முன்பு நானும் எனது தந்தையாரும் திருவல்லிக்கேணியில் தங்கள் இல்லத்திற்கு வந்து தங்கியிருந்தபொழுது தங்கள் குமாரர் சிறு பையனாக இருந்த என்னை—முதல் முதலாக சென்னை வந்த என்னை—அழைத்துச் சென்று திருவல்லிக்கேணி கடற்கரை, சென்னை கோட்டை முதலியவற்றைக் காட்டினார். இன்றுகூட அது எனக்கு நேற்றே போலிருக்கிறது. பின்னர் நான் சென்னையில் படிக்கையில் சில நாட்கள் தங்கள் இல்லத்தில் தங்கியிருந்தேன். தாங்கள் வெளியூர் போக நேரிட்டதால் தங்கள் குமாரரே என்னை தன் தம்பிபோல் பாவித்து சகல சௌகர்யங்களும் செய்தார். அதற்குப் பின்னர் வாழ்க்கைப் போராட்டத்தில் பல இன்னல்களில் துன்புற்று அலைந்த நான் தங்கள் குடும்பத்துடன் தொடர்பு கொள்ளும் பாக்கியமற்றவனாய்ப் போய்விட்டேன். எனினும் தங்களுக்கும் என் தந்தையாருக்குமிடையே இருந்த ஒப்பற்ற அன்பு தங்களை என்றும் என் ஞாபகத்திலேயே இருக்கச் செய்கிறது. எனவே தங்கள் திருக்குமாரர் இறந்த செய்தி அறிய பழைய நாட்கள் என்மனதில் நிழல்படம்போல் தோன்றி வருத்தத்தையளித்து இக்கடிதத்தை எழுதத் தூண்டியது.

முதிர்ந்த வயதில் தங்களுக்கு ஏற்பட்ட இப்பெரிய துக்ககரமான நிகழ்ச்சியைத் தாங்கும் சக்தியை ஆண்டவன் தங்களுக்கு அளிப்பானாக. என் ஆழ்ந்த அனுதாபத்தை இக்கடித மூலம் தெரிவித்துக் கொள்கிறேன், இப்படிக்கு,

(மங்களூர்) சு. ரா. வேணுகோபால்.

என் பிரியமுள்ள கோதைநாயகி, பத்மாவுக்கு: சீனிவாசன் தவறிப்போனதாகக் கல்யாணி கடிதம் எழுதினாள். அதைப் படித்ததும் ஷாக் அடித்ததுபோல் திகைத்துவிட்டேன். என்ன அநியாயம்? உங்கள் வயதுக்காலத்தில் அவர்கள் சவுக்கியத்தை

யும் சந்தோஷத்தையும் பார்க்கவேண்டிய உங்களுக்கு இந்த மகத்தான துக்கம் ஏற்பட்டுவிட்டதைக் கேட்க, ஓடி வந்து உன்னைப் பார்த்துக் கதறவேண்டும் போல் இருக்கிறதே. என்ன அநியாயம்! பகவான் இப்படியா சோதனை செய்வார்? பச்சைக்கிளி போன்ற பத்மாவுக்கு இந்த கதியா வரவேண்டும்? குழந்தைகள் இவ்வளவு சின்ன வயதிலேயா தந்தையை இழக்கவேண்டும்? அன்பான கோதை, உனக்கு புத்ரசோகம் வரவேண்டுமா? உங்கள் துக்கத்துக்கு எப்படி ஆறுதல் எழுதுவதென்றே எனக்குத் தெரியவில்லையே. ஆஜானுபாகுவாய் வளர்ந்து, அறிவிலும்—எழுத்திலும் உனக்கு ஸமமா வந்ததெல்லாம் இந்த அற்பாயுளுக்காகவா? பகவானுக்கு இவ்வளவு கொடுமையா உங்கள்மேல்? நீங்கள் பகவானையே ஸதா தியானித்து, அவன் குணங்களையே எழுதி, அவனையே பஜித்ததெல்லாம் இந்த துக்கத்துக்கா? என்ன கொடுமை, என்ன கொடுமை! நல்லவர்களுக்கே துக்கமா? சோதனையா? ஐயோ என்ன எழுதுவது என்றே தெரியவில்லையே! உன் துக்கத்துக்கு ஆறுதல் எப்படிச் சொல்வது? எப்படித் தீர்ப்பது? கலியுகக் கடவுள் இப்படியா எடுப்பாரை வைத்து, வைப்பாரை எடுத்துக்கொண்டு போகவேண்டும்! தள்ளாத காலத்தில் பிள்ளை காப்பாற்றுவான் என்கிற நம்பிக்கையில் மண்ணைப் போட்டுவிட்டாரே பகவான். அவன் வைத்துப் போன கண்மணிகளைப் பார்த்து, அதன் முகத்தில் உங்கள் துக்கத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் ஆற்றிக்கொள்ளும்படி வேண்டுகிறேன்.

இப்படிக்கு,

(பொலாரம்) தைலம்மா.

ஸ்ரீ அத்திம்பேர் மாது ஸ்ரீ அத்தை அவர்களுக்கு ரங்கநாதன் அநேக நமஸ்காரம்: ஸ்ரீ சீனிவாசன் தங்களை விட்டுப் பிரிந்து பரமபதம் அடைந்து உங்களையெல்லாம் துக்கத்தில் ஆழ்த்திவிட்டது, எங்கள் குடும்பத்தில் ஒரு தலைவன் போனமாதிரியாய் பாவித்து எங்கள் மனமார்ந்த வருத்தத்தை உங்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இவ்வளவு குறைந்த ஆயுசு உள்ளவனும் இருப்பான் என்று நாங்கள் ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. எல்லாம் நன்றாய் செழிப்பாய் இருக்கும் சமயத்தில் உங்களை எல்லாரையும் பரிதவிக்க விட்டு விட்டுப் போய்விட்டானே! தங்கள் மன்னி, குழந்தைகள் வருத்தத்தை உங்கள் அருகில் இருந்து ஆறுதல் சொல்ல நாங்கள் இல்லையே என்று வருத்தப்படுகிறோம். எல்லாம் ஈசன் செயல். தங்களுக்கு இம்மனப் புண் ஆறுவதற்கு வெகு காலம் ஆகலாம். இருந்தபோதிலும் நீங்கள் பெற்றெடுத்தசெல்வம் உங்களை விட்டுப்பிரிந்த துக்கம் எந்நாளும் அழியாததுதான். இருந்தபோதிலும் தாங்கள் மன்னிக்காகவும் குழந்தைகளுக்காகவும் இவ்வுலகில் இருக்குமளவும் மனோதிடமாகவும், உடல்நிலை பாதிக்காமலும் இருக்குமாறு நாங்கள் வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறோம். எங்கள் துக்கத்தை மன்னிக்குத் தெரிவிக்கவும். நமஸ்காரம்.

இப்படிக்கு,

(பொலாரம்) ரங்கநாதன்.

# சங்கத்தின் சகோதரர்.

சகோதரர் வை. மு. ஸ்ரீநிவாஸன் அவர்கள் இளம் வயதில் தன் தாய் தந்தையரையும், அருமை மனைவியையும், அன்புக் குழந்தைகளையும் பிரிந்து ஆசார்யன் திருவடியடைந்தார். அன்பு மிக்க சகோதரரை இழந்த சங்கமும் மிகமிகக் கிலேசத்தை அடைந்திருக்கிறது. ஆலோசனைக் கமிட்டிக் காரியதரிசியாதலால் கமிட்டி மீட்டிங்கிற்கு அவர் முக்கியமான சமயங்களில் வந்து உதவி செய்வார். அச்சமயங்களில் அவருடைய பெருந்தன்மையான குணங்கள் எல்லோரையும் கவர்ந்திருக்கிறது. அவருடைய மரியாதையும், கபடமற்ற அன்பையும், அந்த சிரித்த முகத்தையும், கேள்விகளுக்கு நிதானமாய்ப் பதில் சொல்லும் அழகையும் என்றும் மறக்கவே முடியாது. எனக்குப் பழக்கம் கொஞ்சமானாலும்

'ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே.'

என்கிற முதுரைப்படி எல்லோர் மனத்திலும் அன்பு வேர் விட்டு விட்டது. அந்தப் பெற்றோரிடம்தான் என்ன பக்தி! 'மாத்ரு தேவோ பவ' 'பித்ரு தேவோ பவ' என்பதை அனுசரித்த புண்யவானைப் பிரிந்து எப்படித்தான் அவர்கள் ஸஹிக்கிறார்களோ? சின்னஞ்சிறிய கிளிபோன்ற மனைவி பத்மினி எப்படித் தேறுவாள்? குழந்தைகள் விஷயத்தில் எதைச் சொல்வது?

மஹாத்மாஜி ஸேவா சங்கம் இந்தச் சகோதரருக்காக மிகவும் கலங்கியிருக்கிறது. இந்த சமயத்தில் மாமியவர்களின் (கோதை நாயகி அம்மாள்) ஆச்சரியச் செயலைக் கூறாமலிருக்க முடியவில்லை. ஒரு சிறந்த போர் வீரன் தன் தேசத்துக்காகப் போர் புரியும் போது தன்மேல் ஆயுதம் விழுந்து தான் கீழே கிடக்கும் சமயத்திலும் தன் சகாக்களை நோக்கி நீங்கள் சென்று தைரியமாய் நம் தேசத்தைக் காப்பாற்றுங்கள் கைவிட்டுவிடாதீர்கள். எனக்காகத் தயங்கி நிற்க வேண்டாம், என்று தீரமாகச் சொல்வதுபோல் "சங்கத்தை விடாதீர்கள் தொடர்ந்து நடத்துங்கள்" என் விதிக்காக நீங்கள் தயங்கக்கூடாது என்று தன் துக்கத்தைக்கூடப் பாராட்டாமல் எல்லோருக்கும் சொல்லி ஊக்கம் அளித்துக்கொண்டிருக்கிறார். இது மிகவும போற்றக்கூடியது; பெரியோரது குணங்களின் சிறப்பாகும்.

கீதாசார்யன் இந்தச் சோதனையை ஏற்படுத்தாமல் இருக்கலாம். ஆனால், அவரது லீலையை யார் புரிந்து கொள்ள முடியும்? ஏதோ பெரிய காரியத்துக்காக இந்த சோதனை போலும். 'அச்வத்தாமா ஹத: குஞ்சர:' என்று துரோணருக்கே புத்ர சோகத்தை உண்டாக்கி வேடிக்கை பார்த்தவராயிற்றே அவர். அந்த மாயனுடைய காரியங்களுக்குக் காரணம் ஏது? அவரையே நம்பி சாந்தியுடன் இருக்க வேண்டுமேயல்லாது வேறு என்ன செய்வது? அவர் மறைந்தாலும் அவருடைய கலை ஒளி பிரகாசத்தைக் கொண்டு தேறுவோம். ' சங்கத்தின் சார்பாக,

H. R. ரங்கநாயகி அம்மாள்.

---

குறிப்பு:—இடமும் அவகாசமும் இன்மையால் மற்றுமுள்ள அநுதாபச் செய்திகளையும், கட்டுரைகளையும் அடுத்த இதழில் வெளியிடுகிறோம்.

வை. மு. விஜயலக்ஷ்மி.

 1—4—56

குமாரி வை. மு. விஜயலக்ஷ்மி.

# என்னருமைத் தந்தை.

என் தந்தை மூலம் நான் கற்ற பாடங்கள் அநேகம். அவற்றில் என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தது என்னவென்றால், எத்தனை வயதாய்விட்டிருந்தபோதிலும், பெற்றோர் தம் மக்களைக் குழந்தைகளாகவே பாவித்து வாத்ஸல்யத்தை அள்ளிக் கொட்டுவார்களென்பதும், அப்படியே பெரியவர்களாகிவிட்டாலும் மக்களானவரும் தம் பெற்றோர்களிடத்தில் குழந்தைகளைப்போலவே தம்மையெண்ணிக் குலாவிக் கொஞ்சுவதும் கரை காணாத கடலுக்கு ஒப்பாகவே எனக்குத் தோன்றுகிறது. பிரதிதினமும் காலையில் எனது தந்தை எழுந்து வரும்பொழுது "சந்நிதி திறந்தாயிற்றோ?" என்று வேடிக்கையாகக் கேட்டுக்கொண்டே எழுந்து வருவார். முதன் முதலில் அதன் பொருள் விளங்காமல் விழித்தேன். என் தந்தை பக்தியும், மரியாதையும் பிரதிபலிக்கும்படியே எந்த விஷயத்தையுஞ் சொல்வார். காலையில் எழுந்தவுடன் கடவுளைத் தரிசிப்பதுதான் மக்களின் கடமை. அந்தக் கடமையை ஒட்டி மானஸீகமாய்த் தரிசித்ததாகவும், பெருமாள் பிரசாதமாகிய காபியை அருந்துவதாகவும் அதைக் குறித்து சந்நிதி திறந்தாயிற்றோ என்பதற்கு விளக்கம் கூறுவார். பிரதிதினமும் காப்பி சாப்பிட்டவுடன் என் தந்தை குறைந்தது அரை மணி நேரமாவது என் பாட்டியுடனும், என் தாயாருடனும் பேசிவிட்டுத்தான் அந்த இடத்தைவிட்டு எழுந்திருப்பார். சில சமயம் என் தாத்தாவும் அந்தப் பேச்சில் கலந்துகொள்வார். ஏனென்றால் தாத்தா பிரதிதினமும் காலையில் நித்யக்கடன்களை முடித்துக்கொண்டு கோயிலுக்கும், காலக்ஷேபத்திற்கும் போய்விடுவதால் தினமும் கலந்துகொள்ள முடியாமலிருக்கும். என் தந்தைக்கு அந்த அரை மணி நேரந்தான் தினமும் காலையில் அவகாசம் கிடைக்கும். அதன் பிறகு அவர் மேஜைமீது ஒரு கட்டு ப்ரூப்கள் அவர் வரவை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கும். மற்றும் வக்கீல் தொழில் முறையில் சிலர் வந்து பேசிக்கொண்டிருப்பார்கள். 8 மணிக்குமேல் அச்சாபீஸ் ஆள்கள் வந்துவிடுவார்கள். அதற்குள், அவர்களுக்குத் தோதாக எழுத்துப் பிரதிகளைத் திருத்திக் கொடுக்கவும், ப்ரூப்களைத் திருத்திக் கொடுக்கவும் சரியாகிவிடும். பக்தனும், ஜகன் மோகினியும் அவருடைய நேரத்தில் பெரும் பாகத்தைப் பங்கிட்டுக்கொள்ளும். இதற்கிடையே மணி ஏறிக்கொண்டே போகும். அதனால், என் தந்தையார் அவசரமாகக் குளித்துப் பூஜையை முடித்துக்கொண்டு ருசி பார்க்கக்கூட நேரமில்லாமல் சாப்பிட்டுவிட்டுக் கோர்ட்டுக்குப் போய்விடுவார். சாயந்திரம் வந்த பிறகும் சாவகாசமாக டிபன் சாப்பிடக்கூட நேரமிருக்காது. சில சமயம் வேண்டாம் என்றும் சொல்லிவிடுவார். அன்றைய தினம் அச்சாபீஸ் வேலை எவ்வளவு ஆகியிருக்கிறது என்ற விஷயத்திலும், அன்றைய தபால் விஷயத்தி

லும் பொழுது சரியாகிவிடும். அதோடு, மகாத்மாஜி ஸேவா சங்கத்தின் வேலையையும் தம் பொறுப்பாக ஏற்றுச் செய்வார். சாயங்காலம் பீச்சிற்கோ, சினிமாவிற்கோ அழைத்துப் போகும்படி நானும், என் சகோதரர்களும் கேட்போம். இன்றைக்கு வேலை அதிகம். நாளை போவோம். கோயிலுக்குப் போய் பிரதக்ஷிணம் செய்துவிட்டு வாருங்கள். உலாவின மாதிரி திருப்தியாகிவிடும் என்பார். எங்களை அவர் அழைத்துப் போன நாள் வெகு சொல்பமே. மார்கழிமாதம் ஒருநாள் டவுனிற்கு அழைத்துச் சென்று நாங்கள் விரும்பிய பண்டங்களை வாங்கிக்கொடுத்து அப்படியே பீச்சிலும் கொஞ்ச நேரம் விளையாட வைத்தார். அதுவே கடைசியானதை நினைத்தால் சிறுமியாயினும் என் கண்ணீர் இந்தக் காகிதத்தில் சொட்டி மசியோடு கலக்கிறது.

பிப்ரவரி மாத இதழுக்காக ஜனவரி மாதம் என் பாட்டி எழுதியிருந்த க்ஷேமலாபத்தின் ப்ரூப் நான் பார்க்க நேர்ந்தது. காரணம்? என் பிதா உடல் நலம் சரியில்லாமல் படுத்திருந்தமையே. ஏற்கெனவே சென்ற வருஷம் எனக்கு S. S. L. C. முடிந்த பிறகு ப்ரூப்கள் பார்க்கவும், இன்னும் சில ஆபீஸ் வேலைகளைக் கவனிக்கவும் என்னைத் தந்தை பழக்கி வைத்தார். அதன்படி என்னிடம் வந்த ப்ரூப்பில் நான் படித்த விஷயத்தை அப்பாவிடம் சென்று படித்துக் காட்டினேன். அதாவது: வை. மு. ஸ்ரீ. ஏன் இப்போது ஜகன்மோகினியில் கதை எழுதுவதில்லை என்று பல நேயர்கள் பாட்டிக்கு எழுதிய கடிதத்திற்கு வை. மு ஸ்ரீ-க்கு ஓய்வே இல்லை. கூடிய சீக்கிரத்தில் எழுதுவார் என்று பதிலளித்திருந்தார். இதையே அப்பாவுக்குப் படித்துக் காண்பித்து "ஏம்பா! முன்போல் சரித்திரக் கதை எழுதப் போகிறாயா? அல்லது சமூகக் கதை எழுதப் போகிறாயா?" என்று கேட்டேன். அதற்கு அவர், "சமூகக் கதைதான் அம்மா எழுதப் போகிறேன்; இப்பொழுது கூட அதைப்பற்றித்தான் கற்பனை செய்துகொண்டிருக்கிறேன்" என்றார். "அப்படியானால் எனக்கு அதைச் சொல்லேம்பா" என்றேன். "ஓ! அத்தனை எளிதில் சொல்லி விடுவேனா? நான் எழுதிய பிறகு படித்துக்கொள்" என்றார். "அடேயப்பா! ரொம்ப கிராக்கி பண்ணிக்கொள்ளுகிறாயே" சொல்லாவிட்டால் போயேன் என்று குழந்தைத்தனமாகச் சொன்னேன். அடுத்த க்ஷணமே அவர் முகத்தில் ஒரு புதிய உத்ஸாகமும், ஏதோ ஒரு மாதிரியான ஆவேசமும் பிரகாசித்தன. என்னைத் தட்டிக்கொடுத்து "கோவிச்சுக்காதே விஜை! (என்னை "செல்லமாக" அழைக்கும்போது அப்படித்தான் கூப்பிடுவார்.) கதையை உனக்குச் சுருக்கமாகச் சொல்கிறேன். நீ அதை யாருக்கும்—பாட்டிக்குக்கூடச் சொல்லக்கூடாது. என்ன? சரிதானே" என்றார்.

எனக்கும் கதை கேட்பதென்றால் வெகு விருப்பம்.

அப்போது மாலை 6 மணி இருக்கும். பாட்டி ஸ்வாமிக்கு விளக்கேற்றிப் பூஜை செய்யப் போய்விட்டாள். அம்மா கோயில் பிரதக்ஷிணத்திற்குப் போய்விட்டாள். குழந்தைகள் விளையாடப் போய்விட்டார்கள். தாத்தா மட்டும் ஈஸிசேரில் படுத்துக்கொண்டிருந்தார். அப்பா வெகு குதூகலத்துடன் அந்தக் கதையைச் சொன்னார். கேட்பதற்கு எனக்கு வெகு ஆனந்தமாக இருந்தது.

''அப்பா! இந்தக் கதைக்கு என்ன பெயர் வைக்கப்போகிறாய்'' என்று கேட்டேன். முதலில் ''நீதான் சொல்லேன்'' என்றார். நான் ஏதோ இரண்டொரு பேர் சொன்னேன். அது அவருக்குப் பிடிக்கவில்லை. அவர் "................................." என்று சொன்னார். அது எனக்கு மிகவும் பிடித்தது. ஆகையினால் "மார்ச் இதழில் வை. மு. ஸ்ரீ-யின் மேற்படி நாவல் தொடங்கும் என்று க்ஷேமலாபத்திலேயே பாட்டியை எழுதச் சொல்லிவிடலாமே' என்றேன். "வேண்டாம்! வேண்டாம்! முதலில்லாமல் வியாபாரம் செய்வதுபோல் ஆகிவிடும். கொஞ்சமாவது எழுதி வைத்துக்கொண்டுதான் விளம்பரம் செய்ய வேண்டும். மார்ச் இதழில் கதையையே எழுதி விடுகிறேன் என்று உத்ஸாகமாய்ச் சொன்னார். எங்கள் துர் அதிர்ஷ்டம் மார்ச் இதழே அவருடைய நினைவு மலராக வந்துவிட்டதை நினைக்கத் துயரம் தாங்க முடியவில்லை. என்னுடைய தாத்தாவும் அன்று கதை பூராவும் கேட்டிருப்பதனால் அவர் துக்கத்தின் மத்தியிலே என்னை அன்புடன் தடவிக் கொடுத்தவாறே "அன்று உன் அப்பா சொன்ன கதையை நானும் கேட்டேன். அதை உனக்குத் தெரிந்த மட்டும் எழுதி உன் தகப்பனார் ஆத்மா சாந்தியடையும்படிச் செய்கிறாயா அம்மா?" என்று கண்ணீர்பெருகக் கேட்டார்.

நான் பேசமாட்டாமல் சில நிமிஷம் புலம்பித் தவித்தேன். பிறகு சமாளித்துக்கொண்டு ''நான் சிறியவளாயிற்றே. என்னால் அப்பாமாதிரி எழுதமுடியுமா? தாத்தா" என்றேன்.

"ஏனம்மா முடியாது! நீதான் சொந்தப் பெயரிலும், புனைப்பெயரிலும் எழுதிக்கொண்டு வருகிறாயே. பகவான் திருவடியில் பாரத்தைப் போட்டு அடுத்த இதழிலேயே ஆரம்பித்து விடம்மா என்றார்.' அதையே என் அன்னையும் பாட்டியும் ஊர்ஜிதப்படுத்தினார்கள்.

(தொடரும்)

என் அருமைத் தந்தையையே நான் தெய்வமாகப் பாவித்தும், என் தாத்தாவின் விருப்பத்தைச் சிரசாகவகித்தும் மோகினி வாசகர்களாகிய பெரியோர்களின் ஆசியையும், ஆதரவையும் பரிபூர்ணமாக நம்பியும் அடுத்த இதழில் என் பிதா சொன்ன கதையை ஆரம்பிக்கின்றேன், எல்லோரும் சிறுமியாகிய எனக்கு உத்ஸாகமும், ஊக்கமும் அளித்து ஆதரிக்கும்படிக் கோருகிறேன்.

வை. மு. விஜயலக்ஷ்மி.

# 'ஆடும் குதிரை'

மணி டான் டான்!...என்று 4 அடித்தது. பரீட்சை முடிந்து பள்ளிக்கூடம் விட்டதும் எல்லா பசங்களும்....டேய் நீ எவ்வளவு மார்க், நான் எவ்வளவு மார்க் தெரியுமா?........ என்று கூவிக்கொண்டே ஓடி வந்தனர். அந்த கும்பலில் முகுந்தனும் ஒருவன். எல்லா பசங்களும் அவனைச் சூழ்ந்து கொண்டு, "டேய் முகுந்தா! நீ எவ்வளவு மார்க்?" என்று கேட்டனர். அதற்குள் ஒரு பையன், "அவனைப் போய் மார்க் கேட்கிறீர்களே, அவன் தான் கிளாஸில் முதல் என்று தெரிந்திருக்கிறதே" என்று கூறினான். முகுந்தன் எப்போதும் சிரித்த முகத்துடனேயே இருப்பான். அவன் வழக்கப்படி சிரித்துக்கொண்டு தன் மார்க்கைச் சொல்லிவிட்டு வீட்டுக்கு ஓட்டம் பிடித்தான்.

முகுந்தன் இயல்பிலேயே வெகு கெட்டிக்காரன். முகம் துறுதுறுவென்று இருக்கும். செக்கச்செவேலென்று ராஜ வடிவாக இருப்பான். அவனது அழகுக்கு அழகு செய்யப் போதிய பணவசதிதான் இல்லை. அவன் தப்பி ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்துவிட்டான். அவன் தகப்பனார் ஒரு சிறிய ஓட்டலில் 'ஸர்வர்' வேலை செய்கிறார். அவன் தயார் நாலு வீட்டில் பத்துதேய்த்து வரும் பணத்தைக் கொண்டு சிக்கனமாக குடும்பத்தை நடத்தி வருகிறாள். இருந்தாலும் முகுந்தன் ஒரே பிள்ளையாகையால் அவனுக்கு ஒரு கஷ்டத்தையும் உண்டாக்காமல் செல்லமாக வளர்த்து வந்தார்கள். முகுந்தனும் தாய்தந்தையரின் கஷ்டத்தை உணர்ந்து அவர்களுக்கு வருத்தத்தை உண்டாக்காமலும், அவர்களுக்கு உதவிசெய்து கொண்டும் இருந்தான். முகுந்தனுக்கு வயது ஆறாகிறது. அவன் புத்திசாலித்தனத்தைக் கேட்கவே வேண்டாம்.

கணக்கு பரீக்ஷையில் வாங்கிய மார்க்கை பெற்றோரிடம் காட்ட ஆவலாக வீட்டுக்கு ஓடிவந்தான். தாயாரிடம் மார்க்கை காட்டி சந்தோஷப்பட்டான். முகுந்தனின் தாயாராகிய லக்ஷ்மி தன் மகனது புத்திசாலிதனத்தை எண்ணி மகிழ்ச்சியடைந்தாள். முகுந்தன் இருந்த கஞ்சியைக் குடித்துவிட்டு மறுநாள் பரீட்சைக்குப் படிக்க வாசல்திண்ணையில் போய் உட்கார்ந்தான். சிலநாட்களுக்கு முன்புதான் பக்கத்து வீட்டுக்கு குடி வந்தவரின் மகன் வாசலில் 'ஆடும் குதிரை'யில் ஆடிக்கொண்டிருந்தான். அதைப் பார்த்ததும் முகுந்தனுக்கும் குதிரையில் ஆடவேண்டும்போல் ஆசையாக இருந்தது. ஆனால்....ஆனால்........நாம்தான் ஏழையாயிற்றே, அவன் பணக்காரன். இப்போ குதிரை வாங்க வேண்டுமானால் குறைந்தது இருபது ரூபாய் வேணுமே. நான் எங்கே போவேன்!...என்று யோசித்துக் கொண்டே அந்தப் பையன் குதிரை ஆடுவதையே பார்த்துக் கொண்டிருந்தான் முகுந்தனுக்கு 'சடக்' என்று ஒரு யோசனை தோன்றியது.

அந்தப் பையன் பார்ப்பதற்கு நல்லவனாகத் தோன்றுகிறான். அவனை சிநேகம் செய்து கொண்டு அவன் குதிரையை வாங்கி ஆடலாம் என்று எண்ணினான் ஆனால்.........நம் அம்மா 'பணக்காரப் பிள்ளைகளோடு சேராதே' என்று சொல்லியிருக்காளே, என்ன செய்வது? சரி, நாளை ஒருநாள்தான் பரீட்சை. பரீட்சை ஆகட்டும்...என்று படிக்க உட்கார்ந்தான்.

மறுநாள் பரீட்சையில் வழக்கபடி நல்ல மார்க் வாங்கி விட்டான். பிறகு வாசலில் நின்று கொண்டிருந்தான். அம்மாவிடம் சொன்னால் போகக்கூடாது என்று சொல்லி விடுவாள். அதனால் சொல்லாமல் போகலாம் என்று மெதுவாக அந்தப் பையனிடம் போனான். அங்கு போய் அந்தப் பையனைப் பார்த்து. "பாப்பா, உன் பெயர் என்ன? என்றான். அந்த பையன் முகுந்தனைப் பார்த்து, "உன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

"என் பெயர் முகுந்தன்...."

"என் பெயர் சாரதி........நீ எந்த பள்ளிகூடத்திலே படிக்கிறே?"

"நான் பாலர் வித்யாலயத்தில் படிக்கறேன்....நீ?....

"நான் அதுக்கு பக்கத்திலே இருக்கற நர்ஸரி ஸ்கூலில் படிக்கறேன்; அப்படின்னா நாளைலேயிருந்து நீயும் நானும் ஒண்ணா போலாம் என்ன?...."

"சரி"

"உன் கிட்டே ஆடும் குதிரை இருக்கா? கொண்டு வா ரெண்டு பேரும் ஆடலாம்."

"நான் ஏழை எங்கிட்டே இதெல்லாம் ஏது?

பாவம் நீ ஏழையா, அப்படின்னா என்குதிரையைதரேன். நீ கொஞ்ச நாழி நான் கொஞ்ச நாழி ஆடலாம். என்று சாரதி கூறினான்.

அதன்படியே தினமும் இருவரும் ஒன்றாக பள்ளிக்கூடம் போவார்கள்; குதிரையில் ஆடுவார்கள்; படிப்பார்கள், விளையாடுவார்கள். சாப்பிடும் நேரம் உறங்கும் நேரம் தவிர ஒருவரை விட்டு ஒருவர் பிரியமாட்டார்கள். அவர்களது அன்பு பெரிய கடல்போல் வளர்ந்திருந்தது!

ஒருநாள் வழக்கப்படி முகுந்தன் சாரதியின் வீட்டுக்கு வந்து ஸாரதியைக் கூப்பிட்டான். ஸாரதியின் அம்மா வந்து, "ஸாரதி அவனுடைய அப்பாவுடன் கடைக்குப் போயிருக்கிறான். அவன் குதிரை இதோ இருக்கு. அவன் வரவரையிலும் ஆடிண்டு இரு" என்றாள். முகுந்தனும் குதிரையில் ஆடிக் கொண்டிருந்தான். கொஞ்சநேரம் கழித்து சாரதியும் அவன் அப்பாவும் வந்தார்கள். முகுந்தன் தன்னைக் கேட்காமலேயே தன் குதிரையில் ஆடிக்கொண்டிருப்பதைப் பார்த்து சாரதி கோபமடைந்தான். விடுவிடென்று வந்து முகுந்தனின் கன்னத்தில் 'பளார்' என்று அறைவிட்டான். முகுந்தன் வலி தாளாமல்

'கோ'வென்று கதறிவிட்டான். பிறகு ஸாரதி முகுந்தனைப் பார்த்து "நானில்லாமல் எப்படி என் குதிரையில் ஆடலாம்? இனிமேல் உனக்குத் தரமாட்டேன் போ!" என்று கூறி முகுந்தனை வீட்டைவிட்டு விரட்டிவிட்டான். முகுந்தன் அழுது கொண்டே வீட்டுக்குப்போய் விட்டான்......அம்மா முன்னயே பணக்காராளோடே சேராதேன்னு சொல்லச்சே நான் கேட்கல்லே. இப்போ அழுதா திட்டுதான்கிடைக்கும்னு.. அழுகையை அடக்கிக்கொண்டு முகம் வாடிவதங்க உட்கார்ந்திருந்தான்.

மறுநாளிலிருந்து முகுந்தன் ஸாரதிவீட்டிற்குப்போகவே இல்லை. இதே ஏக்கத்தில் ஜுரம் வந்துவிட்டது. பக்கத்து வீட்டில்ஸாரதிக்கும் முகுந்தன் இல்லாமல் பொழுதுபோகவில்லை. முகுந்தனின் வீட்டு வாசலில்; வந்து எட்டிப் பார்ப்பான்; திரும்பிப் போய்விடுவான். ஸாரதியின் அம்மா மட்டும் "நீ அவனை அன்று அடித்தாயோன்னோ அதனால்தான் அவன் வரல்லே. பாவம் ஏழைப் பையனை அடிக்கலாமா? இனிமேல் அடிக்கக்கூடாது" என்று நல்லதனமாக புத்தி சொன்னாள். ஸாரதிக்கும் தான் பண்ணது தப்பு என்று தெரிந்தது.

ஸாரதியின் அம்மா மிகவும் நல்லவள். முகுந்தனுக்கு ஜுரம் என்று தெரிந்து தினமும் போய்ப்பார்த்து வந்தாள். 'நம் ஸாரதி அடித்ததால்தான் அவனுக்கு ஜுரம் வந்து விட்டது' என்று நினைத்தாள். ஒருநாள் அவள் போகும்போது ஸாரதியையும் அழைத்துச் சென்றாள். அவள் நினைத்தது போலவே ஸாரதியைப் பார்த்ததும் முகுந்தன் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டான். முகுந்தனைக் கூப்பிட்டு "முகுந்தா! என் மேல் உனக்கு கோபமா? நான் உன்னை என்ன செய்தேன்?' என்று கேட்டாள். அதற்கு முகுந்தன், "உங்கள் மேலே கோபமில்லே மாமி! ஸாரதி மேலேதான் கோபம்' என்றான். "ஸாரதியை நான்கண்டிக்கிறேன். இனிமேல் அவன் உன்னை அடிக்கமாட்டான். அவனோடே பேசிண்டு விளையாடு. நீதான் சமர்த்தாச்சே" என்றாள். என்ன சொல்லியும் முகுந்தன் ஸாரதியின் முகத்தைப் பார்க்கவுமில்லை. பேசவும் இல்லை. முகுந்தன் பேசாதது ஸாரதிக்குக் கோபம் வந்து விட்டது. முகுந்தனைப் பார்த்து "நீ என்னோடே பேசாட்டா போ, நானும் பேசல்லே. எங்காத்துக்கும் நீ வரவேண்டாம்" என்று சொல்லி விட்டு ஓடிப்போய் விட்டான். ஸாரதியின் செய்கை அவனுடைய தாயாருக்குப் பிடிக்கவே இல்லை. "முகுந்தா! அவன் அசடு, ஏதோ உளறுகிறான். நான் உனக்கு குதிரை வாங்கித் தரேன் நீ அழாதே" என்று சொன்னாள். அதற்கு முகுந்தனின் தாயார், "அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் மாமி! எங்களுக்கு வாங்கித்தர சக்தியில்லை என்றால் அது என்ன பிடிவாதம்....அப்பா வரட்டும்" என்றாள்.

ஸாரதியின் தாயார், "மாமி! குழந்தைதானே, அதனுலே கேக்கருன். கோவிக்காதிங்கோ....முகுந்தா! சமர்த்தா இரு. நான் போயிட்டு வரேன்" என்று சொல்லி விட்டு வீட்டுக்குப் போய்விட்டாள். முகுந்தனின் தாயார் குழந்தை கேட்டதை —கல்லுபோல் பெற்றோர்கள் இருந்தும்—வாங்கித் தர முடியவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டே தன் வேலையைக் கவனிக்கச் சென்ருள்.

ஃ ஃ ஃ ஃ

லக்ஷ்மி எழுந்திருக்கும் முன்பே யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டு கதவைத் திறந்ததும் தன் மைத்துனன் ராமு நிற்பதைப் பார்த்து, "ஆ!, ஏது ராமு! விடியற்காலையிலேயே வந்திருக்கே! உனக்கு எங்களைஞாபகம்கூட இருக்கா! என்ருள்.

"ஒன்றுமில்லே மன்னீ! உங்களை யெல்லாம் பார்க்கணும் போல் இருந்தது. அதனுல் வந்தேன். முகுந்தனுக்கு ஜுரமாமே? எப்படி இருக்கு!..." என்று உள்ளே வந்தான்.

யாரோ ஒரு புது மனிதர் உள்ளே வருவதைப் பார்த்து முகுந்தன் "யாரும்மா இது?" என்று கேட்டான்.

அதற்கு ராமு, "நான் உன் சித்தப்பாடா! நான் சிங்கப் பூரிலே வேலை செய்யறேன். இப்போ லீவு வாங்கிண்டு வந் திருக்கேன். நான் பட்டணத்திலே ஒரு சிநேகிதன் வீட்டுக்கு வந்தேன். அங்கே உனக்கு ஜுரம்னு கேள்விப்பட்டேன். உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். அவாத்து பையன் ஒத்தன் உன்னைப்போலவே இருப்பான். உன்னைப் பார்த்தா, அவனைப் பார்க்க வேண்டாம். இரண்டு பேரும் ஒரே அச்சு" என்ருன்.

"சித்தியா அவாத்துலே அந்த பசங்களுக்கெல்லாம் ஆடும்குதிரை வாங்கித் தந்திருக்காளோ" என்று கேட்டான்.

"ஓ! ஸைகிள், மோட்டார், ஆடும்குதிரை, பந்து எல்லாம் இருக்கு. ஏம்மா கேக்கறே?" என்ருன்.

அதற்குள் லக்ஷ்மி "பக்கத்தாத்து பையன் குதிரை வைத்திருக்கிருன். இவன் அதை விடப்போனுன். அந்த பையன் இவனை என் குதிரையில் ஆடக்கூடாது என்று சொன்னுன். அதையே எண்ணி கேக்கருன்" என்ருள்.

உடனே ராமு கடைக்குப் போய் 'ஆடும் குதிரை' பந்து இரண்டும் வாங்கி வந்து, "முகுந்தா, இந்தா, இது உனக்கே உனக்கு. நீ இனிமேல் அவாத்துக்கெல்லாம் போகாதே" என்று சொல்லி அதைக் கொடுத்தான். முகுந்தனுக்கு சந்தோஷம் இருப்பே கொள்ளவில்லை. உடனே எழுந்து ஆடும் குதிரையில் ஆட ஆரம்பித்துவிட்டான். இந்த சந்தோஷத்திலேயே படிப்படியாக ஜுரம் குறைந்துவிட்டது. ஸாரதி வீட்டின் எதிரிலேயே ஆடிக்கொண்டு! "பாருடா, என், குதிரையை நீ கொடுக்காட்டாபோ" என்று சந்தோஷ மாக கர்வத்துடன் கூறினுன்.

புண்ணிய க்ஷேத்திர யாத்திரை [16-ம் பக்கத் தொடர்ச்சி]

நாங்கள் பெருமாள் செட்டி சத்திரத்தில் தங்கினோம். இதற்கு அங்கு "மத்ராஸிதர்மசாலா" என்று பெயர். இது மதராஸிலுள்ள செட்டியார்களது பெரு முயற்சியால் கட்டப் பெற்றது.. இதில் ஒரு தளம், சாலை மட்டத்திற்குக் கீழுள்ளது; இதன் கீழ்ப்பாகம் கங்கை நதியில் சிறிது உள்ளே செல்லுகிறது. தண்ணீரின் ஓரத்தில் அமர்ந்து, நாம்காணும் கங்கையின் ஓட்டத்தையும் எதிர்க்கரையிலுள்ள உயர்ந்த மரங்களின் தோற்றத்தையும் என்றென்றும் மறக்கமுடியாது. இந்தச் சத்திரத்தில் யாத்ரிகர்களுக்காகப் பல அறைகள் உள்ளன; ஒவ்வொன்றும் ஒவ்வொருவருடைய பொருளுதவியால் கட்டப்பட்டது. தென்னாட்டு யாத்ரிகர்களுடைய சௌகரியத்திற்காக அமைந்த இச்சத்திரத்தில் நாம் தங்குவதற்கும் சமைப்பதற்கும் வசதிகள் உள்ளன. சத்திரம் அமைந்த இடமும், அதன் ஒரு பக்கத்தில் ஓங்கிய மாளிகைகளும், வடக்கில் உயர்ந்த மலைச் சிகரங்களும், கிழக்கில் விரைந்து பாயும் கங்கையும் அடர்ந்த காடுகளும் நமது மனம் வேறொன்றிலும் செல்லாதவாறு செய்துவிடுகின்றன. அன்று மாலை 3 மணிக்கு நாங்கள் ஹரித்வாரை விட்டு ரிஷிகேசத்திற்குப் புறப்பட்டோம்.

(தொடரும்)

18320



# உதயசூரியன்
வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
முதல் நவீனம் - ரூ. 1-4-0

# மதமா, மனமா?
வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
இரண்டாவது நவீனம் - ரூ. 1-4-0

# அவஸரமூர்த்தியின் அபூர்வ டயரி
வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
மூன்றாவது சித்திரம் - ரூ. 1-8-0

# ராணி சீலாவதி
வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
நான்காவது நவீனம் - ரூ-1/-

# பெண்மணிக்கனல் சரித்திரஜோதி
வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
ஐந்தாவது சித்திரம் ரூ 1/-

**தியாக பலி** அணா 12

# இருளில் ஒளி
வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
ஆறுவது சுடர் ரூ. 1.4.0

**ஜயந்தி சிந்தனைகள்** ரூ. 1-8

**கோதா ஹ்ருதயம்** அணா 12


JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.